விலை ரூபா 6.00

# ஈழநாடு
# வார மலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 18 இதழ் 211
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 3 – 9 – 1995

## ஆண்களின் தொகை இலங்கையில் அதிகரிக்கிறது

(கொழும்பு)

இலங்கையில் பெண்களின் தொகையைவிட ஆண்களின் தொகை தற்போது அதிகமாகக் காணப்படுகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கீடு ஒன்றிலிருந்து இத்தகவல் பெறப்பட்டுள்ளது.

தற்பொழுது இலங்கையின் சனத்தொகையில் 50·5 சத விதத்தினர் ஆண்களாகக் காணப்படுகின்றனர்.

பெண்களின் தொகை மொத்த சனத்தொகையில் 49.5 சத வீதமாகக் குறைவடைந்துள்ளது.

கடந்த சில வருடங்களாக இலங்கை சனத்தொகையில் பெண்களின் தொகையே பெரும்பான்மையாக இருந்து வந்தது. -கி-சி

## பயணிகளை யாழ்ப்பாணத்தில் வைத்து விடுவிக்க புலிகள் இணக்கமாம்

### - பி. பி. ஸி. கூறுகிறது -

(கொழும்பு)

'ஐரிஸ் மோனாவில்' வந்து தற்போது விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் உள்ள 120 பயணிகளையும் புலிகள் யாழ்ப்பாணத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக தெரியவருவதாக பி.பி ஸி தெரிவித்தது.

பி.பி ஸி இதுபற்றி மேலும்

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகள் உத்தரவாதமளிக்காவிடின் படையினர் ஐரிஸ்மோனாவை தாக்குவர்

### - இராணுவம் அறிவிப்பு -

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்ட 'ஐரிஸ்மோனா' கப்பல் இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படமாட்டாது என புலிகள் உத்தரவாதமளிக்காவிட்டால் இந்தக் கப்பலைத் தாக்கப் போவதாக படையினர் தெரிவித்துள்ளதாக பி. பி. ஸி.

(8ம் பக்கம் பார்க்க)

## சவாரித் தம்பர்



சவாரித்தம்பர்: தனது புனித உரிமைக்குப் போராடும் இனத்தை பட்டினி போட்டு பணியப் பண்ணப் பார்க்கிறாள் சந்திரிகா.

சின்னக்குட்டி: .. ...!

சவாரித்தம்பர்: மணிமேகலை பிட்சாபாத்திரம் ஏந்தி பசியைப் போக்கினாள். இவ்விபாவி என்ன வெண்டால்......

—சிரித்திரன் சுந்தர்.

## ★ அமெரிக்க அமைச்சர் தெரிவிப்பு

# புலிகளை 'பயங்கரவாதிகள்' என கூறுவதை அமெரிக்கா ஏற்காது

## இலங்கைக்கு ஆயுதமும் விற்கப்படாது

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் தமிழீழம் கோரிப் போராடி வரும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என அழைப்பதை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை என கொழும்பு வந்துள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவி அமைச்சர் றொபின் ராபெல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுப் பத்திரிகையாளர்களிடம் இதனைத் தெரிவித்த பெண் அமைச்சரான றொபின் ராபெல் மேலும் தெரிவிக்கையில்: இலங்கை அரசுக்கு அமெரிக்கா ஒரு போதும் ஆயுதங்களை விற்கமாட்டாது;

இலங்கை அரசுடன் அமெரிக்கா பெரிய அளவிலான இராணுவத் தொடர்புகள் எதனையும் மேற்கொண்டிருக்கவில்லை எனவே இலங்கைக்கு இராணுவ தளபாடங்களையோ, ஆயுதங்களையோ விற்கப்போவதில்லை எனவும் கூறினார். -சி

## புலிகளுடனான போரில் அமெரிக்கா இலங்கைக்கு உதவ வேண்டுமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்காக இலங்கைக்கு இராணுவ தளபாடங்கள் மற்றும் ஆயுதங்களை வழங்குமாறு கொழும்பு வந்துள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்களுக்கு பொறுப்பான உதவி அமைச்சர் றொபின் ராபெல்லிடம் இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா வெளியுறவு அமைச்சர் திரு லக்ஷ்மன் கதிர்காமர், பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை ஆகியோரை இவர் சந்தித்த

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிபந்தனைகள் அரசுக்கு தெரியாதாம்

(கொழும்பு)

'ஐரிஸ் மோனா' கப்பல் சிப்பந்திகளை விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் என்ன நிபந்தனை விதித்துள்ளார்கள் என்பது குறித்து எதுவும் தெரியாது என அரசு தெரிவித்துள்ளது.

சிப்பந்திகளை விடுவிப்பதற்கு என்ன நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அரசுக்கு இன்னமும் தெரிவிக்கவில்லையென இலங்கை வானொலி தெரிவித்தது.

'ஐரிஸ்மோனா' கப்பலின் சிப்பந்திகள் எட்டுப் பேரும் இலங்கையர்கள் எனவும் இவர்களை விடுதலை செய்ய

(8ம் பக்கம் பார்க்க)

## 60 தபால் பொதிகள் வந்தன நாளை தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வந்த ''லங்கா கல்யாணி கப்பலில்'' யாழ். குடாநாட்டுக்கான அறுபது தபால் பொதிகள் வந்துள்ளன.

இத்தபால் பொதிகள் யாழ் பிரதம தபாலகத்தினரால் நேற்று பருத்தித்துறையிலிருந்து யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்துவரப்பட்டது. இப்பொதிகள் இன்று தரம் பிரிக்கப்பட்டு நாளை திங்கட்கிழமை தபால்கள் விநியோகிக்கப்படும். குடாநாட்டின் ஏனைய தபாலகங்களுக்கான தபால் பொதிகள் வழமைபோல் அனுப்பி வைக்கப்படும்.

இம்முறை வந்த தபால் பொதிகளில் வெளியூர் தபால்கள் எதுவும் வரவில்லை என்றும் உள்ளூர் தபால்களே வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது -170-175 சி

★ தரமான சுவையான ஐஸ்கிறீம்
★ குளிர்பானங்கள்
★ ஸ்பெஷல் நட்ஸ் வனிலா
★ கிறீம் சர்பத்
★ ஃப்ரூட்சலட்
★ சிற்றுண்டி வகைகள்

ராஜா குளிர்சுவையகம் (ராஜா கிறீம் ஹவுஸ்)

36, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம். (ஏ-5246)

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா, மூட்டுவாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப் பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப் படுத்துவார் வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு. யாழ்ப்பாணம். (சி-1594)

### கணிதம் – 95

O/L மீட்டல் இதுவரையும் பெறு பேறடையாதவர்கட்கு திரிகோண கணிதம், மடக்கை வரைபு, தேற்றங்கள் பங்கு முதலியன B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, திருநெல்வேலி சிவன்கோவில் மேற்கு வீதி. (சி-1646)

### தவறிவிட்டது

செல்வி திருமகள் குருநாதன் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல: 668110193 V பேராதனைப் பல்கலைக்கழக பல் மருத்துவ பீட அடையாள அட்டை, ரூபா 4000/-, திறப்புக் கோர்வை என்பன பேர்சுடன் 28-08-95ல் ஆலங்கேணியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-1645)

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் I C, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனா, பூஸ்ரர் மற்றும் உதிரிப் பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஒடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம். அன்ரனா பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி ரேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5245)

### இறைச்சிக் கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி. நல்லூர். (ஏ-5249)

### O/L ஆங்கிலம்

விசேடமாக Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு - 9, 10 உட்பட) தேவைப்படின் வீட்டிற்கு வந்து கற்பிக்கலாம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல:- C-1647 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-1647)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–09–03**

ஞாயிறு இரவு

8-02 இசையரங்கம் - நிகழ்ச்சியில்பாடுபவர் திருமதி மிதிலாவிவேகானந்தன் அவர்கள்
8-30 செய்திகள்
8-40 தொடர்நாடகம் பொன். கணேசமூர்த்தி எழுதிய "இலங்கை மண்" 9ம் அங்கம்

**1995–09–04**

திங்கள் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச்செய்திகள்
7-45 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–09–03**

ஞாயிறு மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 மழலைகளுக்காக
5-30 கதம்பம்
6-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-10 செய்திகள்
6-15 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# பஞ்சாப் குண்டு வெடிப்பில் பலியானோர் தொகை 15ஆக அதிகரிப்பு

[புதுடில்லி]

பஞ்சாப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்புச்சம்பவத்தில் கொல்லப்பட்டோரின் தொகை தற்போது பதினைந்தாக அதிகரித்திருக்கின்றது.

இக்கார் குண்டுவெடிப்பின் போது பஞ்சாப் முதலமைச்சர் பியாந்திசிங் உட்பட பன்னிரண்டு பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டிருந்தனர்

இதேவேளை இக்குண்டு வெடிப்பு சம்பந்தமான தகவல்களைத் தருவோருக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் ராஜீவ்காந்தி கொல்லப்பட்ட குண்டு வெடிப்புச்சம்பவத்திற்கு அடுத்ததாக அரசியல் தலைவர் ஒருவரை பலிகொண்ட குண்டு வெடிப்பாக இது அமைந்துள்ளது.

இதே வேளை பஞ்சாப்பில் முதலமைச்சர் பியாந்த்சிங் கொல்லப்பட்ட குண்டு வெடிப்புச்சம்பவத்திற்கு தாங்களே பொறுப்பு என 'பாதர் ஹைஷா' என்ற தீவிரவாத சீக்கிய அமைப்பு உரிமை கோரியுள்ளது.

கொல்லப்பட்ட முதலமைச்சர் பியாந்திசிங் ஒரு துரோகி எனவும் இவர் சீக்கிய சமூகத்துக்கு துரோகம் செய்து விட்டார் எனவும் இவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

73 வயதான பியாந்திசிங் அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்னர் இராணுவத்தில் பணி புரிந்திருந்தார்.

இவரின் கொலை தொடர்பாக இருசீக்கியர் மாணவர்களை இந்திய பொலிஸார் தேடி வருகின்றனர். -இ

# டாக்டர்கள் கடமைநேரத்தில் வெளியே செல்லத் தடை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் கடமைபுரியும் டாக்டர்கள் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை வைத்திசாலையிலேயே இருக்கவேண்டும்.

இந்த நேரத்தில் அவர்கள் வைத்தியசாலைக்கு வெளியே தனியார் வைத்தியசாலைகளுக்கு பணியாற்ற செல்லக்கூடாது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் பௌஸி டாக்டர்களைப் பணித்துள்ளார்.

கடமைநேரத்தின் போது அரச வைத்தியசாலைகளில் கடமைபுரியும் டாக்டர்கள் தனியார் வைத்தியசாலைகளில் பிரத்தியேக சிகிச்சைக்காகச் செல்வதினாலேயே இந்த கோரிக்கை விடப்பட்டிருக்கின்றது. -இ

### வருடாந்த உற்சவம்

(அரியாலை)

அரியாலை நீர் நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது

எதிர்வரும் 8ந் திகதி வெள்ளிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் 9ந் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. 59

### ஆண்டு - 5 புலமைப் பரிசில்

பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படும்

அடுத்த வெளியீடு: 03- 09- 95 (ஞாயிறு)

**BOND**
58A ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ-5255)

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் தரமான கூட்டெரு விற்பனைக்கு

நகரக் குப்பை கூழங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக், பீங்கான், கண்ணாடி போன்றவை நீக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு நேரடியாகப் பிரயோகிக்கக்கூடிய தரமான கூட்டெரு விற்பனைக்குண்டு.

டிராக்டர் சுமை ரூபா. 500/- மட்டுமே

சேதனக் கூட்டெருவைப் பயன்படுத்தி சூழலைப் பாதுகாத்து நீண்டு நிலைத்திருக்கும் பயனைப் பெறுவீர்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம் 02-09-1995 (ஏ-5257)

### A/L 95 பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்காக

## A/L 96

சனி — ஞாயிறு
மீட்டல் + பாட வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| 8-00 | PHYSICS | 6-00 | இந்துசமயம் |
| 9-00 | CHEMISTRY | 6-00 | கிறிஸ்தவம் |
| 10-00 | PURE | 7-00 | புவியியல் |
| 10-00 | CHEMISTRY | 8-00 | இந்துநாகரிகம் |
| 11 00 | APPLIED | 9-00 | நாடகமும், அர; |
| 11-00 | PHYSICS | 10-00 | பொருளியல் |
| 1-00 | CHEMISTRY | 11-00 | அளவையியல் |
| 2-00 | ZOOLOGY | 12-00 | கணக்கியல் |
| 3-00 | BOTANY | 1-00 | தமிழ் |
| 3-00 | ZOOLOGY | 2-00 | வர்த்தகம் |
| 4-00 | BOTANY | 3-00 | அரசியல் |

ஆரம்பம்: 03-09-1995

## BOND கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5254)

## அறிவித்தல்

விறகு, மரம் பயன்படுத்தும் காலைகள்,
வெதுப்பகங்கள், வடிசாலைகள்,
உணவகங்கள்
ஆகியவற்றின்

### உரிமையாளர்களுடனான கலந்துரையாடல்

விடயம் :
மரம் தறித்தலை தடை செய்தலும், வன்னியிலிருந்து விறகு மரம் கொண்டுவருதலும்

காலம் :
04 – 09 – 1995-ம் திகதி திங்கட்கிழமை காலை 10–00 மணி;

இடம் :
பலாலி வீதி, திருநெல்வேலி
விவசாயக் கல்லூரி மண்டபம்

✶ மேற்படி கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

விவசாய / சூழல்
பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தாவடி,
தமிழீழம்;

(ஏ-5253)

# மர்மச்சடலங்கள் - ரத்வத்தை டிமிக்கி

## வாரசாரம்

ச. தியாகராசா

சர்வதேச ரீதியாக தங்களுக்கு அவப்பெயர் ஏற்படப் போகிறது என்பதைத் தடுப்பதற்காகவே வாவிகளில் மிதந்த மர்மச் சடலங்கள் தொடர்பாக குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. இந்த விடயம் இப்போது கட்டுக் கடங்காத நிலைக்கு மாறியுள்ளது. இக்கொலைகளில் இனங் காணப்பட்ட சடலங்களில் அனேகமானவை தமிழர்களுடையதாகக் காணப்பட்டுள்ளது.

### பின்னணியில் அரசு

பொலிசாரால் இதுசம்பந்தமாகக் கைதாகப்பட்டோரில் உயர் அதிகாரி உட்பட அநேகர் அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள். பின்னர் கைதானோரில் சிலர் இராணுவப் புலனாய்வுப் பகுதியைச் சேர்ந்தவர்கள். விசாரணைகளின்போது இக்கொலைகள் அதிரடிப்படை கொழும்புத் தலைமையகத்தில் வைத்தே நடத்தப்பட்டதென தெரிய வந்துள்ளது. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொறுப்பு பொலிசாரது. பொலிஸ் பிரிவின் ஒரு பகுதிதான் அதிரடிப்படையினர். இவர்களின் தலைமைக்காரியாயத்தில் மிகக்கொடூரமாக இக்கொலைகள் நடந்திருக்கிறது. இந்தக்கொலைகள் அரசுக்குத் தெரியாது நடந்திருக்க முடியாது இப்போது கைதானவர்களை அரசுகைதுசெய்தும் அவர்களில் சிலர் தம் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறுர்கள் என்று கூறுவதும் அரசின் மனித உரிமை மீறல்களை மறைப்பதற்காகும். காலக்கிரமத்தில் கைதானவர்கள் ஏதோ சாக்குப்போக்கில் விடுவிக்கப்பட்டுவிடுவார்கள் சில சமயங்களில்அவர்களுச்குச்சன் மானங்களும் கிடைக்கலாம். விஜயன் குணவர்த்தனவைத் தாக்கிய பொலிஸ்காரர் பதவி உயர்த்தப்பட்டது போன்ற வரலாறு சிறிலங்காவில் உண்டு.

### ரத்வத்தை டிமிக்கி

அரசாங்கம் எதில் கால் வைத்தாலும் தோல்வியாகவே இருக்கிறது முன்னேறிப் பாய்தல் புலிப்பாய்ச்சலால் தோல்வி. தீர்வுத்திட்ட யோசனைகள் பெரும் சூறவளியைப் பிறப்பித்திருக்கிறது. ஆகவே இவை பற்றிய விமர்சனங்களும் கேள்விகளும் எழுப்பப்படுவது இயல்பான விடயம். நாடாளுமன்றத்தில் அங்கத்தவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களிடம் மறுமொழி கூறுமாறு கேள்விகளைச் சமர்ப்பிப்பார்கள். சாதாரணமாக அவற்றுக்கு மறுமொழியும் கிடைக்கும். அநுருத்த ரத்வத்தையிடம் பாதுகாப்பு அமைச்சு சம்பந்தமான முப்பத்தொன்பது கேள்விகளை ஐ. தே. க. அங்கத்தவர்கள் கேட்டிருக்கிறுர்கள். ஆனுல் அவர் மறுமொழி கொடுக்க



வேண்டிய திகதியில் நாடாளுமன்றுக்கு டிமிக்கி கொடுத்து விட்டார், ஐ. தே. க அங்கத்தவர்கள் இதுபற்றிக் கடுமையாக சாடியுள்ளதுடன் அவரின் வருகையை அவதானிக்கும்படி சபாநாயகரையும் கேட்டுள்ளனனர்.

### இடதுசாரிகள்

இடதுசாரிகள் என்று தம்மைக்கூறிக் கொள்பவர்கள் தங்கள் சுயநலத்தேவைகள் ஏற்படும்போது தீவிர வகுப்புவாதிகளாக மாறுவதும் பௌத்த மத சடங்குகளில் பங்குகொள்வதும் வழக்கம். காலஞ்சென்ற டாக்டர் என். எம். பெரேரா பூத்தட்டுடன் களுத்துறை மகாபோதிக்குச் சென்று வணங்கியதெல்லாம் பழம் கதை. அவருடைய கட்சியைச்சேர்ந்த அத்தாவுட செனிவிரத்ன இப்போது பொதுசன ஐக்கிய முன்னணியில் பொதுநிர்வாக பெருந்தோட்டசேவை பிரதி அமைச்சராக இருக்கிறுர். தான் தொழிற்சங்கவாதியாக இருக்கும்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உயிரையும் கொடுப்பேன் என்று வீரம்பேசியவர் அவர்களின் நலன்களை கவனிக்காது இனப்பிரச்னையை எவ்வாறு தீர்ப்பது என்பதுபற்றி புத்திமதி கூறுகிறுர். வடக்குத்தமிழ் மக்களின் சக்தியை உடைக்க வேண்டுமானுல் அநுராதபுரம் பொலனறுவைப் பகுதிகளையும் வடக்குடன் இணைக்கவேண்டும். அப்போதுதான் கலப்பு சகதி ஏற்பட்டு தமிழர்களின் தனிச்சக்தி இல்லாமல்போய் விடும் என்பதே அவரின் ஆலோசனை. எப்படி இவரது யோசனை தமிழர்களை சிங்களவர்களாக்க எத்தனிக்கிறுர். எந்தவிதத்திலாவது தமிழர்களின் போராட்டத்தை நசுக்குவதே சிங்களவர்களின்குறிக் கோள்.

### வெண்தாமரை

வெண்தாமரை இயக்கம் பல உன்னத நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகமுன்வைக்கப் பட்டுள்ளது. என்று சந்திரிகாவும் அரசும் பறைசாற்றுகிறது வெண்தாமரை இரத்தக்கறை பதிந்தது என்று ஐ தே. கட்சியினர் கூறுகின்றனர். அரசாங்கத்தின் வெண்தாமரை இயக்கம் மூலம் தேர்தல் தொகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கு



ஆயுதப்பயிற்சி வழங்கப்படுகிறது. அரசாங்கம் இதைப்பயன்படுத்தி பயங்கரவாதத்தில் ஈடுபடலாம் என்றும் தொகுதிகளில்ஐ. தே. க ஆதரவாளர்களை அச்சுறுத்தலாம் என்றும் அவர்கள் அஞ்சுகின்றனர். தமிழர்களை அழித்து ஒழிக்க உருவாக்கப்பட்ட வெண்தாமரை இயக்கம் அதன்நோக்கத்தை நிறைவேற்றுது சிங்களவர் மத்தியில் குழப்பத்தை உண்டாக்குவதில் வெற்றி கொள்ளலாம்.

### சீதன ஒழிப்பு

தமிழீழததில் இவ்வாரம் நடந்தேறிய பலபோராட்ட வெற்றிகள் மத்தியில் தமிழீழ

(7ம் பக்கம் பார்க்க)

---

நமது நோக்கு

# தமிழ் நீரிணை

**யாழ்.** பல்கலைக்கழகத்தில் புத்தக வெளியீடு ஒன்றின்போது உரையாற்றிய கலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை ''பாக்கு நீரிணையை பெயர்மாற்றி ''தமிழ் நீரிணை'' என்று அழைக்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளார். உலக நாடுகளில் கடல்கள் எல்லாம் அவற்றிற்கு அருகில் வாழும் மக்களின் பெயரைக் கொண்டே அழைக்கப்படுகின்றன. ஆங்கிலக் கால்வாய் அரபிக் கடல், பாரசீக வளைகுடா, சீனக்கடல் ஆகியவை அங்கு வாழும் மக்களின் பெயராலேயே அழைக்கப்படுகின்றன. அதேபோன்று இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே இருக்கும் பாக்கு நீரிணையின் இரு பக்கத்திலும் தமிழகத்தில் தமிழரும் யாழ்ப்பாணத்தில் தமிழருமே வாழ்கிறுர்கள். இந்த அடிப்படையில் பார்க்கும்போது பாக்கு நீரிணையை தமிழ் நீரிணையென்றே கட்டாயம் அழைக்க வேண்டும்.

ஐரோப்பியர்கள் தங்கள் வசதிக்காக வைத்த இடப்பெயர்களையும் கடல் பெயர்களையும் நாம் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டுமென்பதுமில்லை. தங்களுடைய நாடுகளுக்கு அண்மையில் உள்ள இடங்களுக்கும் கடல்களுக்கும் சரியான பெயர்களை வைத்துவிட்டு தாங்கள் கண்டுபிடிப்புகளின் போது தாம் கண்ட இடங்களுக்கும் கடல்களுக்கும் கண்டுபிடித்தவரின் பெயரையோ அல்லது வேறேதும் காரணப் பெயரையோ வைப்பது ஐரோப்பியரின் வழக்கம். இதை நாம் திருத்திக் கொள்ளலாம்தானே!

இதே நூல் வெளியீட்டு விழாவில் கச்சதீவுபற்றியும் பேசப்பட்டுள்ளது. கச்சதீவு பிரச்னை தமிழகத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையே ஒரு பகடைக்காயாகப் பாவிக்கப்படுகிறது. அதில் இந்திய தேசியக்கொடியை ஏற்ற வெளிக்கிடுபவர்களும் அதுபற்றி வீராவேசமாகப் பேசி அடுத்த தேர்தலில் வாக்கு வங்கியைப் பெருக்க எத்தனிப்பவருமாகப் பலர் ஏட்டிக்குப் போட்டியாக ஈடுபட்டுள்ளார்கள். இந்திய மத்தியஅரசு வாய்மூடி மௌனியாக இருக்கிறது. விடுதலைப் புலிகள் உறுப்பினர் கச்சதீவுபற்றிப் பேசியபொழுது கச்சதீவு தமிழீழத்துக்குச் சொந்தமானதென்றும் அது தொடர்பான சிக்கலோ பிரச்னையோ தமிழீழம் கிடைத்த பின்னரே எல்லைப் பிரச்னை என்ற ஒன்று உருவாகும் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில் இந்திய மீனவர்களை இலங்கை இராணுவம் சுட்டுக் கொல்வது, காயப்படுத்துவது போன்ற சம்பவங்களால் அப்பிரச்னை உச்சக்கொதி நிலைக்கு வந்துள்ளது. தமிழக அரசியல் கட்சிகளும் இப்பிரச்னையை தமது அரசியல் இலாபத்துக்காகப் பாவிக்க முயல்கிறுர்கள். இந்திய மத்திய அரசோ சிறிலங்காவுடன் இந்த விடயத்தில் முண்டிக்கொள்ள விரும்பவில்லை. சிறிலங்காவுடன் நட்புநிலையைப் பேணி அடுத்துக் கெடுக்கும் கபட எண்ணத்துடன் இந்திய அரசு தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டாலும் அசமந்தப் போக்கைக் கையாளுகிறது. ஜெயலலிதா பல தடவைகள் இந்திய மத்திய அரசை தமிழக மீனவர்களுக்கு சிறிலங்காப் படையினர் செய்யும் அட்டூழியங்கள்பற்றி அறிவித்துள்ளது மாத்திரமல்ல கடும் நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டியிருந்தார். ஆனுல் ஒரு பலனும் கிட்டவில்லை. தமிழக மீனவர்கள் மத்தியில் மத்திய அரசுக்கெதிராகவும் தமிழக அரசுக்கும் எதிரான உணர்வலை அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக தனது அரசியல் செல்வாக்கு பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துவருகிறுர். மீனவக் குடும்பங்களுக்கு வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஒன்றை அவர் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறுர்.

---

# பொஸ்னிய சேர்பியர்கள் மீது ஷெல் தாககுதல்

## விமானக் குண்டு வீச்சுககள்

## உலக வலம்

பொஸ்னியாவில் கடந்த வாரம் இரத்த ஆறு ஓடியது. ஐக்கியநாடுகள் சபையின் அமைதி காக்கும் படை, அமைதிப்படையிலிருந்து முற்றிலும் முழுதாக மாறி ஆயுதப் போரில் இறங்கியதுதான் காரணமாகும.

இதனுல் ஐக்கிய நாட்டு அமைதிப்படையின் செயற்பாட்டுப் படைப் பிரிவினர் 600க்கு மேற்பட்ட 'ஷெல்' களை பொஸ்னிய சேர்பிய நிலைகள்மீது வீசினர். 60க்கு மேற்பட்ட நேட்டோ நாடுகளின் விமானங்கள் சேர்பிய நிலைகள்மீது குண்டுமாரிகளைப் பொழிந்தன. பொஸ்னிய சேர்பியர்களால் சுய பிரகடனம் செய்யப்பட்ட குடியரசு தலைமைச் செயலகம் அமைந்திருக்கும் பாலே நகரம் மிகவும் சேதத்துக்குள்ளாகியுள்ளது என்றும் தெரிவிக்கப் படுகிறது.

ஐக்கியநாட்டு அமைதிப் படை அமைதி வழியில் இருந்து வன்முறை வழியில் இறங்குவதற்குக் காரணமாக அமைந்தது பொஸ்னிய தலைநகரான சரஜேவோவில் உள்ள அங்காடிப் பகுதியில் சேர்பியர்களால் ஏவப்பட்ட 'ஷெல்' கள் விழுந்து வெடித்து. சேதத்தை ஏற்படுத்தியது தான்.

பொஸ்னிய தலைநகர் சரஜேவோமீது சேர்பியர்கள் பீரங்கித் தாக்குதலை நிறுத்தும் வரை சேர்பியர் நிலைகள் மீதான தாக்குதல் தொடரும் என்றும் ஐக்கியநாடு அமைதிப் படை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தாக்குதலுக்குப் பதில் தாக்குதலாக பொஸ்னிய சேர்பியர்களும் மீண்டும் மீண்டும் சரஜேவோ நகரத்தை இலக்கு வைத்து 'ஷெல்' தாக்குதலை நடத்தி வருகின்ருர்கள்.

இந்த 'ஷெல்' தாக்குதலில் சில உக்ரேயன்பகுதியில் அமைதிப் படையினர் தங்கி இருக்கும் விடுதிக்கருகிலும் வீழ்ந்து வெடித்துள்ளன.

அமைதி காக்கும் படையினரின் மீராஜ் விமானம் ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று சேர்பியர்கள் அறிவித்துள்ளார்கள்.

பொஸ்னிய சேர்பிய நிலைகள்மீது ஐ. நா. அமைதிப் படை நடாத்திய தாக்குதல் ''கொடூரமானது'' என்று ரஷ்ய அதிபர் ஜெல்சின் வர்ணித்துள்ளார்,

அமெரிக்கா, சேர்பியர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

சரஜேவோ மக்களை அழிக்க இருக்கும் ஆயுதங்களை அப்புறபடுத்தும் வரைக்கும் இராணுவ நடவடிக்கை தொடரும் என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

பொஸ்னிய பிரச்னையால் ஏராளமான மக்கள் வகைதொகையின்றி கொல்லப்படுவதுநிறுத்தப்படுமா? என்பதே இன்றைய கேள்வியாகும்.

அத்தியாயம்- 7

# ஈழக் கடற்பரப்பில் ஆழக்காலூன்றிய சோழர் வழியில்.. வேங்கைக் கடல் வீரர்

மூத்தசிவனின் பிள்ளைகளில் பின்வருவோரின் பெயர்கள் அறியப்படுகின்றன. அபயன், தீசன், மகாநாகன், பத்தபாயா,சூரத்தீசன், மகாசிவன், உதியன், திஸ்ஸ, அசேலா, அனுலா ஆகியோராகும். மகாவம்சமும், தீபவம்சமும் திஸ்ஸவை, தேவநம்பியதிஸ்ஸ என்று குறிப்பிடுகின்றன.

தேவநம்பியதீசன்
[காலம்: கி.மு.247-207வரை]
தேவநம்பியதீசனின் காலத்தில் இந்தியாவில் ஜம்புதீப என்ற நாட்டின் அரசனாக அசோகன் என்பவன் ஆண்டு வந்தான். ஆசோகச் சக்கரவர்த்தியின் இராஜப்பிரதிநிதியாக ஈழத்திற்கு அனுப்பப்பட்ட 'மகிந்தன்' என்ற பௌத்த துறவியும் பௌத்த மதப் பேராசிரியனுமானவன், அக்காலத்தில் ஒரு பிரசாரப் பீரங்கிபோலவே செயற்பட்டான்.

ஈழமன்னனாக ஆண்டுவந்த தேவநம்பியதீசன் பௌத்தத்தை தழுவுவதற்கு முன் ஒரு இந்துவாகவே இருந்திருக்கவேண்டும். அத்துடன், இவனது தாயோ - தந்தையோ தமிழர் வம்சத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கவேண்டும்.

தேவநப்பியதீசன் முதலில் மகிந்தனின் பிரசார வலைக்குள் சிக்கி, ஒரு பூரணைத்தினத்தில் பௌத்த மதத்தை தழுவுகிறான். இவனுக்குப்பின் இவனது அரசியும், மந்திரிகளும், மக்களும் படிப்படியாக வகைதொகையின்றி பௌத்தத்தைத் தழுவியதாக மகாவம்சமும், தீபவம்சமும் கூறுகின்றன.

தேவநம்பியதீசன் பௌத்த துறவிகளுக்கு சிறப்பான வசதிகளைச் செய்துகொடுத்தான். பௌத்த விகாரைகளும் பௌத்த பாடசாலைகளும் இவன் காலத்தில்ஏராளமாகக் கட்டப்பட்டன.

## புத்தரின் ஈழவிஜயம்

இவனதுகாலத்திலே பௌத்தம் ஈழத்தில் தழைத்து ஓங்கி வளர்ந்திருந்தாலும் கூட, [கி.மு. 247-207 வரை] அதற்கும் சில நூற்றுண்டுகளுக்கு முன் [கி. மு. 483க்கு முன்] பௌத்த மதத்தை நிறுவியவரான கௌதம புத்தர் ஈழத்தின் வடதிசையிலுள்ள நாகதீபத்துக்கு வந்து போனதாக பாளி நூல்கள் கூறுகின்றன. நாகதீபத்தை அரசாண்டு வந்த இரு நாக அரசர்களுக்கு இடையே ஏற்பட்ட மணிமுடி சம்பந்தமான பிரச்சனையைத் தீர்த்துவைக்க இருமுறை புத்தர் வந்ததாக இந்நூல்கள் குறிப்பிடுகின்றன. இது உண்மையாக இருந்தால், மகிந்தன் இங்குவருவதற்கு முன்பே ஈழத்தில் பௌத்தம் சிறிய அளவில் பரவியிருக்க வாய்ப்பு இருந்திருக்கிறது. நாக அரசர்களுக்கும் புத்தருக்கும் இருந்த நெருங்கிய நட்பின்காரணமாகவே, புத்தர் வடஈழத்திற்கு வந்திருந்தால் நிச்சயமாக வட[தமிழ்] ஈழத்தில் பௌதத்தத்தை சிறிதளவாவது பரப்பாமல் புத்தர் திரும்பியிருக்க வாய்ப்பில்லை.

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

யாழ்ப்பாணத்தின் வட திசையில் அமைந்திருக்கும் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட பௌத்தசின்னங்கள் ஈழத்திற் தமிழ்ப் பௌத்தர்களின் தடயங்கள்தான் என்பதில் எதுவித கருத்துவேற்றுமைகளும் இருக்கமுடியாது.

அதேசமயம் மகாவம்சம் போன்ற பாளி நூல்களும்' சில சமஸ்கிருத நூல்களும் நாகர்களை மனித இனமாகக் கருதாமல், பாம்பினை வழிபடும் - தேவதைகளின் இனமாகவே கற்பனை செய்துகொண்டு எழுதியுள்ளன...... மந்திரதந்திரங்களும் மாயாஜாலங்களும் கற்று, நினைத்தவுடன் உருவத்தை மாற்றக்கூடிய ஒருவித ஆபூர்வ மனிதர்களாகவே இவர்களை இந்நூல்கள் கற்பனை செய்கின்றன. அப்படியாயின், அப்படியான ஒரு இனத்துடன் புத்தர் பழகவேண்டிய அவசியமென்ன? பிரச்சனையைத் தீர்க்கவேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்விகள் எழத்தான் செய்கின்றன. இவைகளுக்கு இந்நூல்களில் விடை இல்லை.

கி. பி. 5ம் நூற்றுண்டைச் சேர்ந்த 'பாஹியான்' என்ற வரலாற்றுசிரியனும், ஏழாம் நூற்றுண்டை [கி.பி.] சேர்ந்த 'ஹுஆன்திஸாங்' என்பவனும் இலங்கையின் ஆதிக்குடிகள் பற்றிய சில தகவல்களைத் தந்துள்ளனர்.

அதில் பாஹியான் கூறியதாவது:

''இந்த நாட்டில் [இலங்கையில்]ஆரம்ப மனிதக்குடியானவர்கள் ஒருவரும் இருக்கவில்லை.

ஆனல் தேவர்களும், நாகர்களும் இருந்தார்கள். பல்வேறு நாடுகளைச்சேர்ந்த வியாபாரிகள் இவர்களுடன் வர்த்தகம் நடாத்திவந்தனர். பல நாட்டுக்குரிய மக்களும் இந்நாட்டின் பெருமையைக் கேள்வியுற்று, இந்நாடு பெரிய நாடாகவரும்வரை பல எண்ணிக்கையில் இங்குவந்து கூடினர்கள்''

[ஆதாரம்: கோணேஸ்வரம் செ. குணசிங்கம் -பக்கம் - 44]
'ஹுஆன்திஸாங்'-''இந்தத் தீவு கெட்ட தேவதைகளால் குடியேற்றப்பட்டிருந்தது'' - என்று கூறியுள்ளான்' ''இயக்கர் - நாகர் மனிதவர்க்கத்தைக் குறிக்கவில்லை'' என்று மெண்டிஸ் என்ற வரலாற்றுசிரியர் கூறியுள்ளார்.

[தொடரும்[

# சந்திரிகாவிற்கு டிக்ஷித்தின் அறிவுறுத்தல்

இலங்கை - இந்திய ஒப்பந்த திட்ட வரைவை உருவாக்கிய மூலகர்த்தாக்களில் ஒருவரான ஜே. என். டிக்ஷித் இன்று சந்திரிகாவின் தீர்வுத் திட்ட ஆலோசனைகளைப் பற்றி கருத்துத் தெரிவித்துள்ளமையானது ஆய்வு நோக்கிலும், அரசியல் நோக்கிலும் அதிக கவனத்திற்கு உரியதொன்றுகும்.

## முக்கிய அம்சங்கள்

டிக்ஷித் தெரிவித்த கருத்துக்களின் முக்கிய அம்சங்களை நோக்குவோம்.

★ சந்திரிகாவின் புதிய எல்லை நிர்ணயத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

★ தாயகக் கோட்பாட்டிற்குக் குறைந்த தீர்வுக்கு அவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

★ மத்திய அரசாங்கத்தில் பிராந்திய சபைக்குப் பங்கில்லை.

★ ''பிராந்தியங்களுக்கான நில ஒதுக்கீட்டு விவகாரத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் நேர்ந்த தவறு தான் இதிலும் இடம்பெற்றிருக்கின்றது. இது தமிழர்களின் கோரிக்கைக்கு ஏற்புடைய ஒரு செயல் அல்ல. இவை வெறுமனே ஒரு புத்தகப் பூச்சியின் கருத்துக்களல்ல; சூடு கண்ட பூனையின் கருத்துக்கள்.

## முக்கிய தவறு

சந்திரிகாவின் தீர்வுத்திட்ட ஆலோசனையில் உள்ள ஒரு முக்கிய தவறினை டிக்ஷித் தெளிவாக சுட்டிக் காட்டி உள்ளார். டிக்ஷித் ஒரு நிர்வாகி என்ற வகையில் இக் குறிப்பிட்ட தவறு அவரின் மனதிற் பளிச்சென்றுபட்டுள்ளது. அதாவது மத்திய அரசின் அரசியலில் பிராந்திய சபைக்குப் பங்கில்லை என்பதே அது. சமஷ்டி அமைப்பென்றுல் மத்திய அரசில் பிராந்திய அரசிற்கு பங்கிருக்கவேண்டும். பிராந்திய ''அரசின் மீது'' மத்திய அரசிற்கு அதிகாரமும், மத்திய அரசில் பிராந்திய ''அரசிற்கு'' பங்கின்மையும் இருக்குமாயின் அது சமஷ்டி அமைப்பல்ல: ஒற்றையாட்சி அமைப்பேதான்.

தமிழர் மீது ஒரு தீர்வைப் பலாத்காரமாக திணிக்க முனைந்த டிக்ஷித்தின் வாயால் சந்திரிகாவின் தீர்வு யோசனை ஓர் ஒற்றையாட்சி உள்ளடக்கத்தையே கொண்டது என்ற விளக்கத்தை தரவல்லகருத்து வெளிவந்துள்ளமையானது ஆழ்ந்த கவனத்திற்குரியதே.

## தாயகக் கோட்பாடு

டிக்ஷித்தின் கட்டுரையில் ஒரு சில இடங்களில் சந்திரிகாவைப் பாராட்டும் தொனிகள் இருந்தாலும் தமிழரின் தாயகக் கோரிக்கைக்குக் கீழ்ப்பட்ட ஒரு தீர்வு சாத்தியப்படாது என்பதும், அதற்கு ஏற்றுற்போல தான் தீர்வு அமையவேண்டும் என்பதும் கட்டுரையின் ஒரு வெளிப்பாடாய் உள்ளது. மறைமுகமாகவும், ஓரளவு நேரடியாகவும் இத்தகைய கருத்தினை கட்டுரை தருகின்றது.

## நில ஒதுக்கீடு

நில ஒதுக்கீடு விவகாரத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உள்ள அதே தவறு சந்திரிகாவின் தீர்வு யோசனையிலும் உண்டு என்று டிக்ஷித் கூறியுள்ளதன் மூலம் இரண்டு கருத்துக்களை அவர் ஒப்புக்கொள்கிறார். ஒன்று, தான் பங்கெடுத்த இலங்கை - இந்திய ஒப்பந்தம் தவறு என்பது. மற்றையது தீர்வு அதற்கு மேற்பட்டதாய்த்தான் இருக்கவேண்டும் என்பது.

## கசப்பான அனுபவம்

''சமரச முயற்சியின்போது இந்தியா பெற்ற கசப்பான அனுபவம் இவ்விடயத்தில் ஜனாதிபதிக்கு [சந்திரிகா] பூரண ஆதரவை [இந்தியா] வழங்கத் தடையாக இருக்கும். இத்தீர்வுத் திட்டத்தில் மேலதிக முன்னேற்றங்களை ஏற்படுத்த தேவையானவற்றைச் செய்ய புதுடில்லி ஜனாதிபதியை உற்சாகப்படுத்த வேண்டும்''என்கிறார் டிக்ஷித். இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு சிங்கள தரப்பில்இருந்து சு. க. உட்பட பெரும்எதிர்ப்பு வெடித்தெழுந்தது. ஒப்பந்தத்தை எழுதிய ஜனாதிபதி ஜே. ஆர்: ஜெயவர்த்தன ஒப்பந்தத்துடன் ஒத்துழைக்கவில்லை. அடுத்துப் பதவிக்கு வந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு கோரினர். இத்தகைய கசப்பான அனுபவம் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு பூரண ஆதரவை இந்தியா வழங்கத் தடையாக இருக்கும் என்பதே சந்திரிகாவிற்கும், இலங்கை அரசிற்கும் டிக்ஷித் சொல்லும் செய்தியாகும்.

அதாவது சிங்கள அரசையும், சிங்கள அரசியல்வாதிகளையும் நம்பி சிங்கள ஜனாதிபதிக்கு இந்தியா பூரண ஆதரவை வழங்க முடியாத நிலையில் உள்ளது என்ற செய்தியை டிக்ஷித் சிங்கள ஜனாதிபதிக்கும், சிங்கள மக்களுக்கும் தெரிவித்திருக்கின்றார்.

## உற்சாகம் ஊட்டுதல்

இப்படி எல்லாம் கூறிவிட்டும் இலங்கை அரசிற்கு இந்தியா உதவுவதற்கான மனப்பாங்கைத் தான் டிக்ஷித் இறுதியாக வெளிப்படுத்தியுள்ளார் அதாவது ''இத்தீர்வுத் திட்டத்தில் மேலதிக முன்னேற்றங்களை ஏற்படுத்த தேவையானவற்றைச் செய்ய புதுடில்லி, ஜனாதிபதியை உற்சாகப்படுத்த வேண்டும்', என்கிறார்.

இலட்சியப் பயணத்தில் தெளிவான இலக்கு அரைவாசி வெற்றியைத் தானே தேடித் தரும். டிக்ஷித் அனுபவசாலி. இலங்கை விவகாரத்திற் பட்டறிவுள்ளவர். தமிழீழம் எனும் ஒருதெளிவான இலக்கு தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஸ்தாபிதம் பெற்றுவிட்டது என்பதை டிக்ஷித் நன்கு உணர்வார்? அந்த இலக்கு முன்கூட்டியே வெற்றியின் அரைவாசியை ஈட்டிவிட்டது என்பது டிக்ஷித்திக்குப் புரியும்.

## தமிழீழம்

தமிழீழம் அமைவது இந்

[7ம் பக்கம் பார்க்க]

மு. திருநாவுக்கரசு

# பல்சுவை

● அமெரிக்காவில் பழைய ரயர்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்த ரயர்களை எரிப்பதால் சூழல் மாசடைவதை கருத்தில்கொண்டு, இந்தப் பழைய ரயர்களை புதிய ரயர்களாக மாற்றி அமைக்கும் புதிய தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டதால் இந்தக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது... இப்பொழுது அமெரிக்காவில் 205 பில்லியன் பழைய ரயர்கள் கைவசம் இருக்கின்றது. இதன் மூலம் 200 மில்லியன் புதிய ரயர்களை தயாரிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

● அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படுவதும் நறுமணமும் கொண்ட 'ஏன்சல்டிரம்பட்ஸ். என்று நறுமலரின் உற்பத்திக்கு அதிகாரிகள் தடைசெய்துள்ளார்கள். இந்த மலரில் இரசாயனதன்மைகள் இருப்பதினுல் இளைஞர்கள் நோயினுல் பாதிக்கப்பட்டிருக் கின்றுர்கள் 1994-ம் ஆண்டு 112 பேர் இந்த நோயினுல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு பேர் இறந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

● விவாகம் செய்த பெண்கள் விவாகம் செய்யாத பெண்களிலும் பார்க்க கூடிய காலம் உயிருடன் வாழ்கின்றனர் என்று ஆய்வு மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இறந்த 100 பேரில் ·38 விவாகம் செய்த பெண்களும், ·7 விவாகம் செய்யாத பெண்களும் அடங்குகிறுர்கள் இன்னெரு ஆய்வில் பெண்களின் சராசரி வயது 79 என்றும் ஆண்களின் சராசரி வயறு ·73 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

● கடந்த மாத முதல் வாரத்தில் கலிபோனியாவில் உள்ள சாந்தியாகோ நகரத்தில் 35 வயதுள்ள ஜோன் நெல்சன் என்பவர் அமெரிக்கா பாதுகாப்பு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த எம். 60 வர்க்கயுத்த டாங்கி ஒன்றைக் கடத்தியுள்ளார். பின் பொலிசாரினுல் அவர்சுடப்பட்டார். டாங்கி மீட்கப்பட்டது.

● உலகததில்கூடியகாலம் வாழ்ந்த இராணுவச் சிப்பாய் ஜோன். பி, செலின்ய என்பவராவார். இவர் அமெரிக்க இராணுவத்தில் கடமை புரிந்துள்ளார். 1958-ம் ஆண்டு மார்ச் 16-ம் திகதி இறந்த இவருக்கு இறக்கும்போது 113 வயதாகும்.

● உலகில் முதன் முதல் கெரில்லாப் போர் முறையை அறிமுகப்படுததிய நாடு ஜேர்மனிதான். பேர்லின்மீதுபடை எடுத்து வந்தநெப்போலியனை கெரில்லா முறையில் தான் ஜேர்மனி வென்றது.

★ பட்டுக்குடை ★ கொடி
★ ஆலவட்டம் ★ வாகமாலை
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
ஞானம் ஆடையகம்
(அஜந்தாஸ்)
54. சோதியா தெரு, பெரியகடை
யாழ்ப்பாணம்.
(ஏ 5251)

சிறு கதை

# இடிவு

சொக்கன்

அப்பாவுக்கு ஓய்வு கிடைத்தபொழுது குடும்பத்தில் எவரும் மகிழ்ச்சி அடையவில்லை. ஆனல் அப்பாவோ ''அப்பாடா! முப்பத்தைந் தாண்டுச் சுமையை இன்றேடு இறக்கிவிட்டேன்'' என்று நீண்ட பெருமூச்சு விட்டார்.

முப்பத்திரண்டாண்டுகள் அப்பாவின் வாழ்க்கையோடு அத்துவிதமாகிவிட்ட அம்மாவும் பெருமூச்சு விட்டது, உண்மைதான். ஆனல் அது ஏக்கப் பெருமூச்சு என்பது எனக்கு நன்கு விளங்கியது. அப்பா விட்டதோ ஆறுதற் பெருமூச்சு!

ஏன்கவலைப்படுகிறீர்?என்று அப்பா கேட்டார்.

''கவலைப்படாமல் என்ன செய்வது? இன்றுவரை நீங்கள் கல்லூரி அதிபர். நாளை தொடக்கம் வெறும் ஆள்''

என்று பதில் கூறியபடி அம்மா என்னைப் பார்த்தா. முப்பது வயதை எட்டிக் கொண்டிருந்த குமரியாகிய எனது எதிர்காலம் அவவின் நெஞ்சிலே ஏற்றிவைத்திருந்த பெரும் பாரம். அவ்வேளையில் அம்மாவின் கண்களிலே சிக்காராய் வந்து அமர்ந்துகொண்டது.

நான் சிரிக்க முயன்றேன். என்னல் முடியவில்லை. எனது கனவுகள் நான் மறந்து சில ஆண்டுகளாகிவிட்டபோதிலும் அடிக்கடி அம்மாவின் பார்வைகளும் ஏக்க பெருமூச்சுகளும் அந்தக் கனவுகளை உயிர்ப்பிக்கத் தவறுவதில்லை.

''இங்கே பாரும். எனது சம்பளத்திற்கும் இளைப்பாற்றுப் பணத்துக்குமிடையே அதிக வேறுபாடில்லை. அதோடு பொறுப்புகளும் இனி இல்லை. உண்மையிலே எனக்கு ஆறுதலாய் இருக்குது'' என்றார் அப்பா. என்னில் வைத்த பார்வையை எடுக்காமலே அம்மா, ''ஆறுதலோ...? இனித்தான் உங்களுக்குப் பெரும் பொறுப்பு. ஓம் பெரும் பொறுப்பு'' என்றதன் கருத்து அப்போது தான் அப்பாவுக்கு விளங்கியது. அவருடைய முகத்திலும் மலர்ச்சி திடீரென்று குடிபோனது கண்டு ''எல்லாம் என்னல் தானே?'' என்று மனத்தினுள்ளே சாபங்கள் இட்டவாறு நான் அந்த இடத்திலிருந்து எழுந்து சமயலறைக்குச் சென்றேன். ஈரவிறகின் புகை மண்டலத்தாலும் ஏற்படுத்த முடியாத கண்கலங்கலும், எரிவும் எனக்கு உண்டாயின. மிகுந்த சிரமத்துடன் விம்மலை அடக்கிக்கொண்டேன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை எனது கனவுக்கு அர்த்தம் இருந்தது. அந்த அர்த்தத்துக்கு நம்பிக்கை நீரூற்றிச் செழிக்கச் செய்வதன் என் அப்பாவின் தங்கை மகன் நிர்மலன். பெயருக்கு ஏற்றபடி தூயவனய் அவன் இருப்பான் என்றுதான் அப்பாவும் அம்மாவும் நானும் நம்பியிருந்தோம்.

விதவையாகிவிட்ட மாமியை அப்பா எங்கள் வீட்டிற்கு அழைத்துவந்தார். அவவின் ஒரே மகன் நிர்மலனும் வந்தான் என்று சொல்ல வேண்டியதில்லை. என்னையும் என் அண்ணன், தம்பி இருவரையும் பார்க்கிலும் அதிக பாசத்தினை அப்பா நிர்மலனிலே செலுத்தியதாக எங்களுக்குத் தோற்றியது. இது எரிச்சலைக் கிளப்பினலும் அம்மா அந்த எரிச்சலைத் தணிப்பதில் அதிக கவனம் செலுத்தியதற்கும் காரணம் இருந்தது.

மாமியும் அம்மாவும் எங்கள் இருவருக்கும் எப்பொழுதோ சாணைச் சீலை போட்டுவிட்டதன் வெளிப்பாடுதான் அம்மாவின் பொறுமையும் கரிசனையும் என்பதை நான் விளங்கிக் கொள்ள நாளாகவில்லை.

நிர்மலன் வளர்ந்தான். நாங்களும் வளர்ந்தோம். ஆனல் எங்கள் வளர்ச்சியோ உடலளவிலேதான். நிர்மலனே அறிவாலும் திறமையாலும் மேலே மேலே ஏறிச் செனறு இன்று ஒரு டொக்டராகியுள்ளார். குடிகாரத் தகப்பனின் ஊதாரித்தனத்தால் எல்லாவற்றையும் இழந்து வந்த மாமிக்கும் நிர்மலனுக்குமென்றே எங்கள் அப்பா தம்மை ஓடாக்கிக் கொண்டார். நிர்மலனின் ஐந்தாண்டு வைத்தியப் படிப்புக்குநாங்கள் ஒவ்வொருவரும் செய்ததியாகங்களை நான்எடுத்துச்சொல்வதானல் அவை நெடுங்கதையாகவும் தற்புகழ்ச்சியாகவும் நீண்டுவிடும் என்பதால் இதனுடன் நிறுத்திக்கொள்கிறேன்.

என் அண்ணன் வெளிநாட்டில் குடும்ப அட்டைப் பதிவுப்படி 'கூலி' என்ற அந்தஸ்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். தம்பி போராளி. முன்னது ஏக்கத்தையும் பின்னது மன நிறைவையும் தருகின்றன.

அண்ணன் படிப்பில் மட்டம். அப்பாவின் கருத்துபடி 'உருப்படாத முட்டாள், ஆனல் அவர் அனுப்பிய பணந்தான் நிர்மலனை டொக்டராக்கியதிலே பெரும் பங்கு வகித்தது என்ற உண்மையை நிர்மலன் மறந்தாலும் எங்களால் மறக்க முடியாதிருப்பது அற்பத்தனம்போலப் பிறருக்குத் தோற்றலாம். ஆனல் எங்கள் குடும்ப எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாருக நிர்மலன் நடந்துகொண்டதன் பின்பு உண்மையை மறுப்பதில் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

நிர்மலன் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு டொக்டராஞன். யாழ்ப்பாணத்திலே அவனுக்கு வேலை செய்ய வாய்ப்புக் கிடைத்தபோதிலும், அவன் அதை ஏற்கவில்லை. அப்பா எவ்வளவோ சொன்னர். அம்மா மாமிக்குக் குறிப்பாகத் தங்களின் ஆரம்ப கால விருப்பத்தினைத் தெரிவிக்கவும் தவறவில்லை. ஆனல் இந்த விருப்பத்தைக் கிள்ளி எறிவதே அவனது அடிப்படை நோக்கம் என்பதை நாங்கள் விளங்கிக்கொண்ட பொழுது.........

கொழும்பு சென்ற நிர்மலன் விரைவில் மாமியையும் தன்னேடு அழைத்துக்கொண்டான். ஆரம்பத்தில் கிழமைக்கு ஒரு கடிதம், பின்பு மாதம் ஒன்று. இன்று அநேகமாக கடிதமே இல்லை!

நிர்மலனையும் என்னையும் இணையாகக் காண்பதிலே என் பெற்றேர் கொண்டிருந்த ஆசைக்கு அளவே இருக்கவில்லை. ஏன்? எனக்குக் கூட.........

எங்கள் வசதியான வாழ்க்கைக்கென்று அப்பா சில காலத்துக்கு முன்பு எங்களின் வீட்டைப் புதிப்பிப்பதில் வெறியே கொண்டு முனைந்து நின்ருர். நான், அம்மா, தம்பி, அப்பா நாலு பேருமே கூலிகளாய் மாறி மண் சுமந்தோம். தம்பி மேசனுக்கு உதவியாளாய்த் தன்னை முற்ருக முறித்துக்கொண்டான். நீரிழிவு நோயாளியான அப்பா, தமக்கு லீவு கிடைக்கும் வேளைகளிலெல்லாம் தொழிலாளியோடு தொழிலாளியாய் மாய்ந்து அடிக்கடி வைத்தியசாலையிலே தங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானர். எங்கள் வயதுகள் போலவே கடன் பளுவும் ஏறிக்கொண்டே வந்தது.

எங்களின் உயிரையும் உடல் வலுவையும் கொஞ்சம் கொஞ்சமாய் உறிஞ்சி அண்ணனின் வெளிநாட்டுக் கூலிப் பணத்தையும் ஏப்பம் விட்டு மேலதிக கடன் வட்டிகளுடன் எங்களின் பழங்காலத்து நாற்சார் வீடு நவீன மாளிகையாய் எழுந்தது. அப்பாவும் அம்மாவும் எங்களின் புதிய வீட்டை அடிக்கடி பார்க்கும் பார்வையும், பேணும் கரிசனையும் சில வேளைகளில் அசட்டுத்தனமாக, குழந்தைத்தனமாகக் கூட எனக்குத் தோற்றுவதுண்டு. இத்தனை பாடுகளும் எங்கள் இருவரதும் எனதும், நிர்மலனதும் எதிர்கால நல்வாழ்வுக்காகவே என்று எண்ணுகையில், என்னை அறியாமலே என்னுள்ளே பெருமிதக் கிளர்ச்சி உண்டாகும். அப்பா, அம்மா உடன்பிறப்புக்களிலே நன்றிப் பெருக்கு எல்லை மீறிப் பாய்ந்தோடும்.

ஆனல் இத்தனையும் சடப்பொருள்களான குண்டு வீச்சு விமானத்துக்கும், குண்டுகளுக்கும் தெரியுமா? எத்தனையோ அப்பாவிப் பொது மக்களுக்கு நடந்ததுதான் எங்களுக்கும் நடந்தது! ஒரு நாள் சில நிமிடத்துளிகளில் எங்களின் 'மாடமாளிகை' மண்மேடாகி, சிதலமாகி... சமாதானத்துக்காக போர் நடத்தும் சந்திரிகா அரசின் கனவுபோலச் சிதைந்து துகள் துகளாகிவிட்டது.

ஊரையேவிட்டுஅகதிகளாக ஓடிவந்து, யாழ்ப்பாணத்தில் வாடகை வீடுகள் பல மாறி இன்று வீட்டு உரிமையாளரின் சிடுசிடுப்புக்களுக்கும், வெளியேறக் குறிக்கும் தவணைகளுக்கும் இடையே அல்லாடிகொண்டிருக்கிறேம்.

நாளை தொடக்கம் அப்பாவுக்கு ஓய்வு. வீடு கொழுத்த சீதனப்பணமும், பெரும் படிப்புப் படித்த அழகிய பெண்ணும் தேவைப்படுவதால் வெட்கம் கெட்டு அப்பாவுக்குப் பதில் எழுதிய நிர்மலனுக்கு எங்களால் இவற்றில் ஒன்றையும் என்றைக்குமே அளிக்கமுடியாது. [நான் அழகி அல்ல. படிப்பும் ஏ. எல். வரை தான்]

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வெளியில் வருகிறேன். அப்பாவும் அம்மாவும் மௌனச் சிற்பங்களாய் அத்துவானத்திலே கண்களை ஓட்டியவண்ணம் இருக்கிருர்கள். ''அம்மா, அப்பா, நிர்மலன் என்று ஒருவன் எங்களின் வாழ்க்கையில் இடம் பெற்ற இந்தக் கணத்திலிருந்து மறந்துவிடுங்கள். சத்தியமாக அவனை மட்டுமல்ல இனி எந்த ஒருவனையும் எதிர்பார்க்கும் நிலையை நான் கடந்துவிட்டேன். நீங்கள் எனக்காக இனிக் கவலைப்பட வேண்டாம்'' அமைதியாகக் கூறுகிறேன். அப்பாவும் அம்மாவும் எல்லையறுபரம் பொருள்போல் இருந்தபடியே இருக்கிருர்கள்.

(யாவும் கற்பனை)

---

# கவிமலர்

[நம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் ஏதேச்சதிகாரத்துக்கு கணவனை பலிகொடுத்த ஒரு விதவைத் தமிழ்மகளின் மனக்கவலை.........இது]

## மகனே நீ மாறிவிடு...!

ஐயிரண்டு மாதமாய் அங்கமெலாம் நொந்துபெற்ற
ஆருயிரே! என் அன்புச் சுடரொளியே!
ஆண்மகவு நீயென்று ஆனந்தம் நான் கொண்டேன்
ஆதலினல் உந்தனுக்கு அறிவுரைகள் தருகின்றேன்
வீணர்களோடிருந்து வீண்பொழுது கழிக்காதே
வீதியால் போவோரில் வழிப்பறிகள் செய்யாதே
சோம்பேறியாய் தினமும் சோம்பித் திரியாதே
சோற்றுக்காய் உன்னுடலைத்துணிந்து வளர்க்காதே
கோடிக்கரம் உன்னைத் தாங்கி நின்றிடினும் - உன்
கொள்கை வழியதனில் குழப்பம் கொள்ளாதே
நாடி அவர்உன்னை நாவால் அசைத்தாலும்
நாணி ஒருபோதும் நலிந்து போகாதே
போர்க்களத்தில் தன்மகவைப் புரட்டிய வீரமகள்
புறநானூற்றுத் தாயின் புதல்வியடா உன்அன்னை
யாழ்நகரவீதியிலே ஷெல்லினல் உன்தந்தை
பாழ்பட்ட பாதகரால் பலியானர்
பிறக்கின்ற மானிடர்கள் இறப்பது இயற்கையடா
- ஆனல்
மறவர்க்கு மரணம் மைல்கல் எல்லையடா
சொந்தச் சகோதரர்கள் இரத்தத்தில் துடிக்கையிலே
பந்தபாசத்தால் பதுங்கி நீ நகராதே
வெளிநாட்டு மோகத்தால் வெளியேற நினைத்திட்டால்
வெளியூரான் அறுவடைக்கு வேகமாய் வந்திடுவான்
காறி உமிழ்ந்திடுவார் கண்மணியே உனை மக்கள்
மாறிவிடு என்மகனே! அதற்கு முன்னே மறவனய்
மாறிவிடு.

- ஆதிலட்சுமி சிவகுமார்

---

# குப்பைமேனி ஓர் அற்புத மூலிகை

மருத்துவம்

வைத்திய கலாநிதி

**நாகேஸ்வரி நாகலிங்கம்**

குப்பைமேனிச் செடியை நம் எல்லோருக்கும் தெரியும். கோடை காலத்திலும் பார்க்க மாரி காலத்தில் எங்கும் செழுமையாக வளரும். குப்பைமேனி தானே என்று இதனை நாம் கவனிப்பதில்லை. பரந்த இயற்கை மருத்துவ மூலங்களான மூலிகைகளில் குப்பைமேனிக்குச் சிறந்த இடமுண்டு. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் அவர்களின் பல நோய்களுக்கு நிவாரணியாகின்றது.

குப்பைமேனி இலைகளைக் கொண்டு வந்து இடித்துப் பிழிந்து சாறு எடுத்து, அச் சாற்றில் அரை டம்ளர் அளவுக்கு உப்பைக் கரைத்து ஒரு மண் சட்டியிலிட்டு சாறு சுண்டி உப்புப் பூர்க்கும்வரையில் காய்ச்சி ஆறவிடவேண்டும். பின்னர் அந்த உப்பை அம்மியிலிட்டு பட்டுப்போன்று அரைத்து ஒரு சீசாவில் பக்குவம்பண்ணி வைத்துக் கொண்டு அஜீரணம், வாய்வு, வயிற்றுவலி போன்றவை எம்மைத் தொந்தரவு செய்யும் நேரங்களில் சிறிதளவு தூளை எடுத்து மோரில் கலக்கி காலை, மாலை குடித்துவரச் சுகம் காணலாம்.

சிறுவர்களின் வயிற்றிலுள்ள பூச்சிகளையும் குப்பைமேனி அற்புதமாக அகற்றுகிறது. செழிப்பாக வளர்ந்த குப்பைமேனிச் செடிகளை அப்படியே கொண்டு வந்து நன்கு சுத்தம் செய்து பொடிப் பொடியாக நறுக்கி வெய்யிலில் நன்கு காயவைத்து, அதில் ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு மண்சட்டியிலிட்டு குடிநீர் செய்து காலையில் வெறும் வயிற்றில் சிறுவர்களின் வயதிற்கு தகுந்தபடி 1-2 தேக்கரண்டியளவு குடிக்க கொடுத்துவிட வேண்டும். 3 மணி நேரம் கழிந்த பின்பு பேதியாகும். அவ்வளவுதான் பூச்சிகள் உயிரிழந்து மலத்துடன் வெளியேறுவதை காணலாம்.

காது வலியினல் அவதிப்படுகிறீர்களா? கவலையை ஒழியுங்கள். கைவசமுள்ள குப்பைமேனி இலையை தணலில் வதக்கி கசக்கிப் பிழிந்த சாற்றில் வலியுள்ள காதில் 2 துளிகளை விட்டு பஞ்சை வைத்து அடைத்து விடுங்கள். மூன்றே வேளையில் குணம் காணலாம்.

செய்யான், பூரான் போன்ற அதிக விஷமுள்ள ஜந்துக்களின் விசத்தினைப் போக்குவதற்கு குப்பைமேனி இலைகளுடன் சிறிதளவு உப்பும் சேர்த்து மைபோல அரைத்து உடல் முழுவதும் பூசி ஒருமணி நேரம் வரை ஊறவைத்து நன்ருக குளிக்க வேண்டும். இப்படியாக தொடர்ந்து 3 நாட்கள் செய்துவர விசம் முறிந்துவிடும்.

தொய்வு நோயாளிகளுக்கும் குப்பைமேனி இலை நல்ல செய்தி சொல்கிறது. ஆமாம் குப்பைமேனி இலைகளைக் கொண்டு வந்து சாறு பிழிந்து வடிகட்டி அதில் 4 தேக்கரண்டி வீதம் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு காலையில் மட்டும் குடித்துவர அத்தொல்லையிலிருந்தும் விடை பெறலாம்.



# சிறுவர் அரங்கம்

குட்டிக்கதை

## பதவியிலும் பணிவு

அது ஓர் வைத்திய சாலை. வெளிநோயாளர் பகுதி மக்களால் நிரம்பி இருந்தது. அந்த வரிசையில் உபாத்தியாயர் ஒருவரும் இருந்தார். அவர் பெயர் மாணிக்கவாசகர். எல்லோரும் ஒழுங்கின்படி உள்ளே வைத்தியரிடம் சென்று கொண்டிருந்தனர். உள்ளே இருந்த வைத்தியரின் பெயர் தீபன்.

மாணிக்கவாசகர் தன் முறை வந்ததும் வைத்தியரிடம் உள்ளே வந்தார். அவரை சற்றும் எதிர்பாராத தீபன் எழுந்தபடி ''வாங்கோ சேர்! வாங்கோ!'' என வரவேற்றார். தீபனைக் கண்ட ஆசிரியர் ஒரு கணம் திகைப் படைந்தார். தனக்கருகே இருந்த வேறு ஒரு நாற்காலியில் அமரச்செய்துவிட்டு, மற்றவர்களுக்கு சிட்டை வழங்கி முடித்தபின் அவரோடு பேசினார். தன்னிடம் படித்த மாணவன் ஒருவன் வைத்தியகலாநிதி ஆகியதை எண்ணி ஆனந்தப்பட்டார்.

''தீபன் நீ.....'' என்றவர் ''சொறி, சொறி, நீங்கள்...'' என அழைத்தார். அப்போது தீபன் ''சேர்! நீங்கள் உரிமையோடு நீ என்றே அழைக்கலாம். எப்படி இருந்தாலும் நான் உங்கள் மாணவன்'' என்றார். அதற்கு ஆசிரியர் ''படிக்கும்போதே ஒழுக்கமும் கீழ்ப்படிவும் உள்ள நல்ல மாணவனாக இருந்தாய். அதனால் உயர்ந்தாய்'' என்று கூறினார். உடனே ''இது எல்லாம் நீங்கள் கற்றுத்தந்த பாடமும் அறிவுரைகளும்தான் என் தொழிலுக்கு வித்தாக அமைந்தது'' என பணிவுடன் தீபன் சொன்னார். வைத்தியக் கலாநிதியானாலும் தீபனின் அடக்கமும் பண்பும் ஆசிரியரை வெகுவாகக் கவர்ந்தது, ''டொக்டர் உங்களுக்குஎனது பாராட்டுக்கள். உங்கள் பணிவு மிகச் சிறந்ததய்யா. மேலும், மேலும் இத்துறையில் மேதாவியாகி சேவை செய்ய எனது ஆசிகள்'' என அன்புடன் ஆசீர்வதித்தார். ஆசிரியரின் தளர்ந்துபோன இரு கைகளையும் பற்றி தன் கண்ணில் ஒற்றிக்கொண்டார். அந்த வைத்தியர்.

**சி. திலீபன்**
ஆண்டு-8
யாழ். மத்திய கல்லூரி

## உங்களுக்குத் தெரியுமா?

1. நீர்மூழ்கிக் கப்பலைக் கண்டுபிடித்தவர் யார்?
   புஸ்நெல்.
2. துவிச்சக்கர வண்டியை [சைக்கிள்] கண்டு பிடித்தவர் யார்?
   மக்மிலன்.
3. [ஹெலிகொப்டர்] உலங்கு வானூர்தியைக் கண்டுபிடித்தவர் யார்?
   பிறிகுவே.
4. நியோன்[Ne] வாயுவை கண்டுபிடித்தவர் யார்?
   வில்லியம்ராம்சே [1898]

**வே. ஐங்கரன்**
ஆண்டு 9,
யா/கலாநிதி
ஆ. தியாகராசா ம. ம. வி.

## விடுகதைகள்

1. வெய்யிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன?
2. மணியடித்தால் நகரும் பாம்பு அது என்ன?
3. கழுத்துண்டு தலை இல்லை உடல் உண்டு, குடல் இல்லை, கை உண்டு, காலில்லை அது என்ன?
4. வாயில்லாப் பறவை ஊரூராய் பறக்கிறாள் அது என்ன?
5. மலையேறும் கந்தப்பனுக்கு முதுகில் மூன்று குறி. அது என்ன?

விடைகள்:

1. வியர்வை.
2. புகையிரதம்
3. சேட்
4. ஆகாய விமானம்
5. அணில்

**லோ. ஜெயதரன்**
கொக்குவில் இந்துக்கல்லூரி

## குழந்தைகளே.....!

கண்ணே கனியே குழந்தைகளே — நாளை
மண்ணை ஆளும் மன்னவரே!
அழகுத் தமிழாய் வளர்ந்திடுவீர் — என்றும்
அறிஞர் போற்ற வளர்ந்திடுவீர்!

பெரியோர் சொல்லைக் கேட்டிடுவீர் — அது
பின்னால் உங்களை உயர்த்திடுமே!
அறிவும் பண்பும் சிறந்தோரே — எம்
அருமைச் செல்வம் அறிவீரே!

**செல்வி பூங்கொடி அருளம்பலம்**
ஆண்டு - 11
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## அறிந்துகொள்ளுங்கள்

★ உலகில் மிகப் பெரிய தீவு எது?
கிரீன்லாந்து. பரப்பு 21,75,000 ச. கி. மீ.

★ கடற்கரையிலிருந்து மிகவும் தூரத்திலுள்ள தலைநகர் எது?
மெக்சிக்கோ (அமெரிக்கா)

★ உலகின் உயரமான (உயரத்திலுள்ள) தலைநகர் எது?
திபெத்தின் தலைநகர் லாசா 3631 மீற்றர்.

★ உலகில் ஆகக்கூடிய மழை கிடைக்கும் பகுதி எது?
இந்தியாவில் மேகலாய மாநிலத்தில் சீரபுஞ்சி எனுமிடம்.

**ஞா. ஸ்ரீதேவி**
ஆண்டு - 7 A,
வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. வி.

# கைதடி வயோதிபர் இல்லத்தில் முதியவர்களின் சோகக்கதைகள்

நாங்கள் கைதடி சாந்தி அகத்துள் நுழைகிறோம். சாந்தி அகங்களுக்குரிய அந்த அமைதி அந்த சூழலில் தென்படுகிறது. வயோதிபர்களில் ஒரு சாரார் ஆலயத்தில் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தார்கள். சில வயோதிபர்கள் கர்த்தரின் அருள் வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்களைக்கடந்து நாங்கள் அந்தக் கட்டடத்தில் நுழைகிறோம். முன்னே வருவது நூல் நிலையம். அந்த நூல் நிலையத்தில் சில வயோதிபர்கள் சஞ்சிகைகள், தினசரிகள் வாசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில்ஒருவர் சொல்கிறார். 'இந்த அலுமாரிகளில் புத்தகங்கள் இருக்கின்றன. நாம் நல்ல புத்தகங்கள் எடுத்து ஒவ்வொரு நாளும் வாசிப்போம் என்கிறார்.

கைதடி வயோதிபர் மடத்தில் அங்கு வாழும் வயோதிபர்களைச் சந்திப்பதற்கு அங்கு கடமை புரியும் எம். பூபாலராஜன் எங்களுக்கு உதவி புரிகின்றார். அவர் எங்களை அழைத்துச்சென்று வயோதிபர்களைச் சந்திப்பதற்கு ஒழுங்குகளைச்செய்தார் வயோதிபர்கள் கூறிய கருத்துக்களை அவர்களின் முதல் எழுத்துக்களுடன் தருகின்றோம்

அரியாலையைச் சேர்ந்த எஸ். இ. கூறுகையில்,

நான் அரியாலையைச் சேர்ந்தவன். நான் இங்கு வந்து 17 வருடங்கள் பூர்த்தியாகின்றன. குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு தகராற்றால்

**மணிசேகரன்**

அவர்களை துறந்துவிட்டு இங்கு வந்து இணைந்துகொண்டேன். நம்பமாட்டீர்கள். எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒரு ஆண் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். மற்ற மகன் புத்தளத்தில் இருக்கிறார், 2 பிள்ளைகளில் ஒருத்தி கனடாவில் மற்றவள் ஜேர்மனியில் இருக்கிறார். முன்பு இடைக்கிடை பணம் அனுப்புவார்கள். இப்போது இவர்கள் தொடர்புகளை துண்டித்துவிட்டார்கள். அவர்களோடு இணைவதிலும் பார்க்க எனக்கு இங்கிருப்பது பூரண அமைதியைத் தருகிறது.

சுண்டுக்குழியைச் சேர்ந்த மா. ந. சொல்கிறார்.

நான் எட்டு வருடங்களாக இங்கு இருக்கிறேன். எனது மனைவி செத்துப்போனார். எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். ஒரு பெண். மற்ற மூவரும் ஆண்கள். ஒரு ஆண் மாத்திரம் இங்கிருக்கிறார். மற்றவர்கள் எல்லாம் வெளிநாட்டில். கடைசிக்காலத்தில் என்னைப் பார்க்க எவரும் இல்லாததால் இங்கு வந்து தஞ்சமடைந்துள்ளேன்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த என். ஜோ. அவர்கள் சொல்கிறார்.

நான் இங்கு வந்து எட்டு மாதமாகிறது. 1983-ம் ஆண்டு இனக்கலவரத்தில் பொரளையில் எனது புடவைக் கடை எரிந்ததினால் 10 லட்சத்துக்கு மேல் நட்டமடைந்தேன். அதன் பின்பு எனது வாழ்க்கை சூனியமாகிவிட்டது. நான் கல்யாணம் கட்

[7-ம் பக்கம் பார்க்க]

# அன்று விமானக் குண்டால் கொழும்பு மக்கள் பதுங்கு குழிக்குள் ஓடினர்

1942 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ந் திகதி கொழும்பு மாநகரம் அல்லோல கல்லோலப்பட்டது. ஜப்பான், நாடுகள் பிடிக்கும் முயற்சியில் கொழும்பு நகரின்மீது குண்டு வீசியதே இதற்குக் காரணமாகும். ஏப்ரல் 9 ந் திகதியும் திருகோணமலையிலும் ஒரு குண்டைப் போட்டது ஜப்பான்.

ஜப்பான் இலங்கையைப் பிடிப்பதில் ஆர்வம் கொண்டதற்குக் காரணம் கொழும்பைப் பிடித்துக்கொண்டால் அங்கிருந்து இந்தியாவை சுலபமாக தன்வசப்படுத்திவிடலாம் என்பதுதான்.

குண்டு விழுந்த சத்தத்தைக் கேட்ட கொழும்பு மக்கள் மரணபீதி அடைந்தார்கள். நகரத்தை விட்டு மக்கள் இரவோடிரவாக கிராமப்புறங்களை நோக்கி ஓடினார்கள். பொருட்கள் எல்லாவற்றையும் அந்தந்த இடத்தில் விட்டு. உயிரைக் காப்பாற்றினால் போதும் என்ற நிலையில் கையில் அகப்பட்டதை சுருட்டிக்கொண்டு ஓட்டமும், நடையுமாகப் பாதுகாப்புத் தேடிச் சென்றார்கள்

இவர்களை ஏற்றி இறக்கும் பணியில் மாட்டுவண்டில்களும் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. அவிசாவளை, கொழும்பு, காலி, கொழும்-கண்டி வீதிகளில் மாட்டு வண்டில்கள் கிராமங்களை நோக்கி நகர்ந்தன.

ஆட்சியில் இருந்த பிரித்தானிய அதிகாரிகள் கொழும்புக்கு ஆபத்தில்லை. போதிய பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவித்திருந்த போதிலும் மக்கள் அவர்கள் அறிவிப்பை அசட்டை செய்து கொழும்பு நகரை விட்டு அகன்றார்கள்.

இந்த நேரத்தில் எரிகிற வீட்டில் பிடுங்கியது அறுதி என்பது போல ஒரு சிலர் கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, கொட்டாஞ்சேனை போன்ற முக்கிய இடங்களிலுள்ள காணிகளைக் குறைந்த விலையில் வேண்டிய பணியிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில் கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித் தெரு போன்ற இடங்களில் இருந்த மக்கள் ஆகாயத் தாக்குதலில் இருந்து தப்புவதற்கு பாரிய பதுங்குகுழிகளை அமைந்து அதில் பதுங்கிக் கொண்டனர்.

வீடுகளில் பிரகாசமாக விளக்குகள் எரியக்கூடாது என்றும், வீட்டின் கண்ணாடிகளை மறைத்து செய்தித்தாள் ஒட்டவேண்டுமென்றும், ஆஸ்பத்திரி வைத்திய நிலையங்கள், பிரசவ விடுதிகளில் செஞ்சிலுவைச் சின்னம் பொறிக்கப்படவேண்டும் என்று கட்டளை இடப்பட்டிருந்தது.

[7-ம் பக்கம் பார்க்க]

# நூல் அரங்கு

## 'ஆதாரம்' சஞ்சிகை

''ஆதாரம்'' சஞ்சிகையின் 16-வது இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் எமது தேசிய அபிலாசைகளான நிம்மதி. சுதந்திரம், கௌரவம், பாதுகாப்பு இவற்றுடனான வாழ்வுக்காக தளராத உறுதியுடன் நாமிருக்க வேண்டும் என்ற தேசியத் தலைவரின் அறிவுரையுடன் வெளிவந்துள்ளது

செவ்விந்திய இனத்தலைவர் சீயேட்டிங்கின் படமும், அவர் வாஷிங்டனில் உள்ள அமெரிக்க தலைமைக்கு எழுதிய கடிதமும் இடம்பெற்றுள்ளது.

அவ்வெழுத்துக்கள் அவரது ஆன்மாவின் பேச்சு. விதேசிகளான அமெரிக்கர்கள் சுதேசிகளான செவ்விந்தியர்களை தமது இராட்சத ஆயுத பலத்தால் மிரட்டுகையில் வேறு என்ன செய்யமுடியும்? இதை நினைத்து நெஞ்சம் கனக்கத் தான் செய்கிறது.

யாழ். குடாநாட்டில் தண்ணீர் பிரச்னை என்ற கட்டுரையில் அதன் ஆசிரியர் பொறியியலாளர் எம். இரத்தினம் குடாநாட்டு நீர் நிலைகள் பற்றி அறியத் தருகிறார். இந் நிலைகளின் புவியியல் இருப்பிடங்களை ஒரு விரிவானவரைபடம் ஒன்றின் மூலம் காட்டியிருந்தால் வாசகர் அவ்விடங்களை சிக்கலின்றி தெளிவாக தெரிந்துகொள்ளலாம்.

அடுத்ததாக சாண்ட்ரா போஸ்டல் என்பவர் எழுதிய நீர்வளம் பற்றிய மூலக் கட்டுரை ஒன்றை வற்றிவரும் நீர்வளம் எனத் தலைப்பிட்டு என். ராமதுரை தமிழில் தருகிறார்.

இதில் முக்கியமாக நிலத்தடி நீர் பற்றி ஆராயப்பட்டிருக்கின்றது.

விவசாயத்துக்கென எமக்கு கிடைக்கும் நீர்வளத்தின் உச்சப் பயன்பாட்டை அடைய வழி என்ன என்பது பற்றி செ. விக்கினேஸ்வரன் நீர்ப்பாசன நெற்செய்கையில் நீர் நிர்வாகம் என்ற தலைப்பில் ஆராய்ந்திருக்கிறார்.

இதில் நீர்த்தேவை, நீர் முகாமைத்துவம் போன்ற முக்கிய விடயங்களில் குறிப்பிடத்தக்க நல்ல விடயங்களை ஆசிரியர் சொல்கிறார்.

கணனியும் வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளும் என்ற கட்டுரையில் கணனித்துறையின் செல்வாக்கு மேற்கில் இருந்து கிழக்குக்கு கைமாறுவதை ஆசிரியர் தெளிவாகச் சொல்கின்றார். இத்துறையில் கணனி இயக்கி (Soft Ware) உற்பத்திப் போட்டியில் ஆதிக்கத்தை இழந்துவரும் அமெரிக்கா இத்துறையில் உயர்ச்சி அடைந்துவரும் இந்தியா அதன் அயல் நாடுகள் என்பவை பற்றி விளக்கப்பட்டிருக்கின்றன.

**தீபன்**

### தமிழகத்துக்கும்-தமிழீழத்துக்கும்இடையே அமைந்துள்ள

# பாக்கு நீரிணையை 'தமிழ்நீரிணை' என பெயர் மாற்றம் செய்யவேண்டும்

## பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

இரு தமிழ்ப் பகுதிகளான தமிழ்நாட்டிற்கும், தமிழீழத்திற்கும் இடையே அமைந்துள்ள பாக்குநீரிணையை 'தமிழ் நீரிணை' என பெயர் மாற்றம் செய்யவேண்டுமென யாழ் பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆலோசனை தெரிவித்துள்ளார்.

யாழ்: பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற புவியியல்துறை விரிவுரையாளர் ஏ. எஸ். ஆனந்தனின் 'கச்சதீவு அன்றும்-இன்றும்' நூல் வெளியீட்டு விழாவில், வெளியீட்டுரை ஆற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்;-

இரு தமிழ்ப் பகுதிகளுக்கிடையில் அமைந்துள்ள பாக்குநீரிணையை தமிழ்நீரிணை என நாம் அழைக்கவேண்டும். ஏனெனில் உலக நாடுகளை அண்மித்து உள்ள கடல்கள் யாவும் அந்நாட்டு மக்கள் பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகின்றன. ஆங்கிலக் கால்வாய், அரபிக்கடல், பாரசீக வளைகுடா, சீனக்கடல் ஆகியவை அங்கு வாழும் இனத்தின் பெயரிலேயே அழைக்கப்படுகின்றன. அதேபோன்று இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள பாக்கு நீரிணையின் இருபுறத்திலுள்ள தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் தமிழர்களே வாழ்ந்து வருகிருர்கள். எனவே பாக்குநீரிணையையும் நாம் தமிழ்நீரிணை என அழைக்கவேண்டும் என்ருர்.

செ. எட்வேட் தலைமையில் ஆரம்பமான இவ்வெளியீட்டு நிகழ்வில் நூலின் அறிமுக உரையை யாழ். பல்கலைக் கழக புவியியல்துறை தலைவர் பேராசிரியர் செ. பாலச்சந்திரனும், வாழ்த்துரையை யாழ் மாவட்ட கடற்ருெழில் விரிவாக்க உத்தியோகத்தர் ஏ. போசப் அவர்களும், மதிப்புரையை வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் ச சத்தியசீலனும் ஆற்றினர் கள் ஈறுத்துரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் வே. பாலகுமாரனும் நிகழ்த்தினர்.

இந்நூலின் முதற்பிரதியை யாழ். மாவட்ட கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சிநவரட்ணம் கலைப்பீடாதிபதியிடம் இருந்து பெற்றுக் கொண்டார். -95-கி

## சந்திரிகாவிற்கு

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தியாவிற்குப் பாதகமானது என்பதே புதுடில்லியினதும், டிக்ஷித்தினதும் நிலைப்பாடு. எனவே தமிழீழம் என்றதெளிவான இலக்கிலிருந்துதமிழரை விலகச் செய்ய வேண்டும் என்ருல் தமிழரின் அடிப்படைக் கோரிக்கையான தாயகக் கோரிக்கையில் இருந்து தீர்வுத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்பதே டிக்ஷித்தின் நிலைப்பாடு.

ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து டிக்ஷித்தின் கட்டுரை தரும் இறுதிச் செய்தி இதுதான். அதாவது தமிழரின் தாயகக் கோரிக்கைக்கு ஏற்ப இலங்கை அரசு தீர்வை முன்வைக்க வேண்டும். அத்துடன் இந்தியாவின் முழு நம்பிக்கையும் பெறக்கூடிய வகையில் இலங்கை அரசு நடந்து கொள்ள வேண்டும். இந்த வழியில் சந்திரிகாவை புதுடில்லி உற்சாகப்படுத்தவேண்டும்.

இலங்கை அரசையும், இந்திய அரசையும் நோக்கியே டிக்ஷித்தின் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது என்பது முக்கியமாக் கவனிக்கத்தக்கது. பார்வைக்குத் தமிழரின் நலனுக்காகப் பரிந்து எழுதியுள்ளதுபோல் உணரத்தக்க இக்கட்டுரை செயலில் இலங்கை—இந்திய அரசுகளின் இறுதி நலனில் உறுதியாகக் கால் ஊன்றி நிற்கின்றது.

### இராஜதந்திரம்

டிக்ஷித்தின் தொழில் இராஜதந்திரம் என்ற வகையில் இரு பொருள் விளக்கம் கொள்ளத்தக்க பதங்களை அவர் தனது கட்டுரையில் பிரயோகித்திருந்தாலும்இலங்கை - இந்திய அரசுகளை நோக்கிய தெளிவான ஓர் இலக்குடனேயே இதனைஅவர் எழுதியுள்ளார். எனவே அவரது இலக்கிலிருந்து பதங்களை நோக்குமிடத்து இருபொருள் ஊசலாட்டத்திலிருந்து விடுபட்டு மிகத் தெளிவான ஒரு பொருள் விளக்கத்திற்கு வந்து சேரலாம்.

சிங்கள அரசியல் இனவாத உணர்ச்சிவசத் தளத்தில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. எனவே டிக்ஷித்தின் உபதேசம் அவர்களின் செவியில் ஏருது. ''தமிழர் பிரிந்து செல்வதற்கு நீயே காரணமாய் இருந்தாய் என்பதற்காக எதிர்காலத்தில் தமிழர் உனக்கு சிலை எழுப்பி மாலை சூடுவார்கள்'' என்று பண்டாரநாயக்காவைப் பார்த்து என். எம். பெரேரா கூறியது அனைத்துச் சிங்களத் தலைவர்களுக்கும் பொருந்தும் என்பது டிக்ஷித்திற்கு இன்னும் புரியவில்லை.

## கைதடி வயோதிபர்

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

டாதபடியால் பார்ப்பதற்கும் உறவினர்கள் இல்லாதபடியால் இந்த மடத்தில் சேர்ந்திருக்கிறேன்.

எஸ். ஸி. என்ற 35 வயதுப் பெண்ணும் இங்கு உள்ளார். இவர் சித்த சுவாதீனமுற்றவர். இவர் இந்தியாவில் சங்கீதக்கலை படித்துக்கொண்டிருக்கும்போது ஒருவர் காதலித்து தாய்மை அடையச் செய்துவிட்டு ஏமாற்றிவிட்டாராம். இவரது மகன் சிறுவர் அனுதை இல்லத்தில் வளர்க்கப்பட்டாராம். இவர் இன்னும் அப்பாதிப்பிலிருந்து முற்ருக மீளவில்லை என்பது தெரிகிறது.

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து வந்த வீ. ஏ. (வயது-65) என்ற பெண் சொல்கிருர். இவருக்கு மகள் இருக்கிருர். ''மகளின் குடும்பம் பெரிய குடும்பம். அவர்களுக்கே வாழ்க்கை நடத்த வருமானம்போதாது. இந்நிலையில் நாங்களும் அவர்களோடு இருந்து ஏன் கஷ்டத்தைக்கொடுப்பான் என இங்கு வந்துவிட்டோம். ஆனல் பின்னர் பேரப்பிள்ளைகளோடை இருக்க விருப்பம் தான். அதற்கு வசதியுமல்லோ இருக்கவேணும்'' என்று சோகத்தோடு கூறுகின்ருர்.

ஏழெட்டு வயோதிபர்கள் ஒன்ருக இருந்தனர். இங்குள்ள பராமரிப்பைப் பற்றி இவர்களிடம் கேட்டோம்.

எங்களுக்கு காலை 5 மணிக்கு தேநீர் வழங்கப்படுகின்றது. 7-45 க்கு காலைச் சாப்பாடு பணிஸ், பாற்சோறு, பாண், இடியப்பம் இவைகளில் ஒன்று காலைச் சாப்பாடாக வழங்கப்படுகிறது. மத்தியானம் சோறு. சோற்றுக்கு இரண்டு மரக்கறியும் இறைச்சி, முட்டை, மீன், கருவாடு இதில் ஒன்று கிழமையில் ஒரு நாள் கட்டாயம் இருக்கும். இரண்டு நாள் மரக்கறிச் சாப்பாடு. மீண்டும் 2 மணிக்கு தேநீர். இரவு பாணும், சாம்பாறும் வழங்கப்படுகின்றது என்ருர்கள்.

எங்களைப் பொறுத்தளவில் பிள்ளைகள். குடும்பங்கள் உறவினர்களால் கைவிடப்பட்டு இருந்தபோதிலும் நாம் நிம்மதியுடன் எங்களது கடைசிக் கால வாழ்க்கையை போக்கிக் கொண்டிருக்கின்ருேம்.'' என்ருர்கள்.

# இவ்வாரம் எப்படி?

03–09–95 முதல்
09–09–95 வரை

**மேடம்:**
தொழில் திட்டங்களில் பின்னடைவு ஏற்படும். குடும்பத்தில் குழப்ப நிலையுண்டு, பய உணர்வு மேலோங்கும், காரிய தடையுண்டு, பணத்தட்டுப்பாடு உண்டு. உடல்நிலை சோர்வடையும், அமைதி குன்றிய வாரம்.

**இடபம்:**
வாக்குறுதிகளை நிறைவு செய்வதில் தடங்கல் இருக்கும், குடும்பத்தில் இனம்புரியாத குழப்பமிருக்கும், சகோதர ஒத்துழைப்புண்டு பணநிலை உற்சாகமாக இருக்கும்; சுபசெய்தி கிட்டும், தொழிற் சிறப்புண்டு, சுமாரான வாரம்.

**மிதுனம்:**
தொழிலில் அபரிதமான லாபமுண்டு, பங்காளர்கள் ஒத்துழைப்பு நல்குவர். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும், மகிழ்ச்சியுமுண்டு. அபூர்வ சந்திப்பு பழைய நினைவுகளை மீட்கும், பயண அனுகூலமுண்டு. அதிர்ஷ்ட வாரம்.

**கடகம்:**
குடும்ப உறவில் கருத்து வேறுபாடு உருவாகும், இனசன விரோதமுண்டு, தொழில் மந்தநிலையில் இருக்கும், பணநிலையில் பாதிப்புண்டு. புத்திரர் கவலையுண்டு, காரியங்கள் சிரமத்தின் மத்தியில் கைகூடும், மனச்சுமையான வாரம்.

**சிங்கம்:**
தொழில் துறையில் பகைமை நிலவும், வரவினங்களில் தடையேற்படும். பணக்கஷ்டமுண்டு, குடும்பத்தில் குழப்பநிலை இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிப்படையும், இடமாற்றம் உருவாகும், துயர வாரம்;

**கன்னி:**
முயற்சிகள் வீணுகும், குடும்பத்தில் சுமுக உறவுண்டு, எதிர்பாராத செலவினமுண்டு, நண்பர்களிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றி மறையும், தொழிலில் சுமாரான லாபமுண்டு, எதையும் நிதானமாக செய்வது அவசியம், திருப்பமான வாரம்.

**துலாம்:**
குடும்பத்தில் கருத்துவேறுபாடு பலமாக இருக்கும், புதிய முயற்சிகள் பிரச்னை தரலாம், சிலசமயம் காரசாரமான விவாதத்தை தரலாம், தொழிலில் கடும் உழைப்பு இருக்கும், பணவிரயம் உண்டு, நன்மை தராத வாரம்;

**விருச்சிகம்:**
குடும்ப ஒற்றுமையுண்டு, இனசன பகைமை அகலும், தொழிலில் கணிசமான முன்னேற்றமுண்டு, அதிகாரிகள் பாராட்டுக் கிட்டும், பணநிலை முன்னேற்றமடையும், காரிய சித்தியுண்டு, சிறப்பான வாரம்;

**தனுசு:**
வார முற்பகுதியில் நிலவிய துயர்கள் நீங்கும், குடும்பத்தில் அமைதியுண்டு, தாய் வழி உறவு சீரடையும், தொழிலில் லாபம் உண்டு. தெய்வீக செலவுண்டு, பணநிலைவிருத்தியடையும், வாக்குவாதங்கள் கவலை தரும், தொல்லைதரும் வாரம்.

**மகரம்:**
குடும்பத்தில் சலனங்களும், மனத்துயருமுண்டு, தொழிலில் நஷ்டமுண்டு, பணநெருக்கடியில் சஞ்சலமான நிலையுண்டு, பெண்களால் கவலையுண்டு, நண்பர்கள் ஒத்துழைப்புண்டு. குழப்ப வாரம்;

**கும்பம்:**
குடும்பத்தில் கலகலப்பும் மகிழ்ச்சியுமுண்டு, புதிய பணிமூலம் சிறப்படைவீர்கள், தொழிலில எதிர்பாராத லாபமுண்டு, பிதாவழி நன்மைகள் கிட்டும், மனை மாற்றங்களும் கௌரவமும் ஏற்படும், சிறப்பான வாரம்.

**மீனம்:**
குடும்பத்தில விரோத சிந்தனை தலைதூக்கும், மனநிலை பாதிப்புண்டு, வேண்டாத துன்பங்களும் அதனுல் பொருள் செலவுமுண்டு, பணநிலை நன்ருக இருக்கும், விரோதிகளை வெல்லும் சூழ்நிலை இருக்கும், நன்மை தீமை கலந்த வாரம்,

கணிப்பு: ஜோஸ்யர்,

### வியட்னும் யுத்தத்தில் சுடப்பட்ட

# அமெ. விமானசிதைவு மீட்பு

(லண்டன்)

வியட்னும்-அமெரிக்க யுத்தத்தின்போது சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க விமானம்ஒன்றின் சிதைவுகள் பல வருடங்களின் பின்னர் கடலிலிருந்து தற்பொழுது மீட்கப்பட்டுள்ளன.

வியட்னுமிய மீனவர் ஒருவரின் மீன்பிடி வலையில் இந்த விமானத்தின் சிதைவுகள் சிக்கியதையடுத்தே இவ்விடயம் வெளி வந்தது.

எம-105 ரக இந்த போர் விமானம் 1975 ஆண்டு காலப் பகுதியில் வியட்னுமிய போராளிகளினுல் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தது.

இருபது வருடங்களுக்குமுன்னர் நடைபெற்ற வியட்னும்-அமெரிக்க யுத்தத்தின்போது இரண்டாயிரத்திற்கும் அதிகமான தனது படை வீரர்களும், யுத்த விமானங்களும் காணுமல் போயிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது; -கி

## இன்று

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட கூட்டம் ஒன்று இன்று 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாகவுள்ள பேரவையின் பணிமனையில் பேரவையின் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும் -154

## மர்மச்சடலங்கள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நீதிநிர்வாகத்துறையினர் அமுலுக்குக் கொண்டுவந்துள்ளமணக்கொடைததடைச் சட்டம் எமது சமூக வரலாற்றில் புதிய முக்கிய திருப்புமுனையை தோற்றுவித்துள்ளது இச்சட்டம் பெண்களின் விடிவிற்கு வழிகோலி அவர்களைத் தலைநிமிர்ந்து நிற்பவர்களாக மாற்றியுள்ளது.

## அன்று விமானக்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனல் கொழும்பை தாக்க வந்த விமானம் எச்சலன் சதுக்கற்தில் இருந்த இராணுவத் தலைமைப்பீடததுக்கு குண்டுகள்வீசுவதற்கு பதிலாக அங்கொடை வைத்தியசாலை மீது குண்டை வீசியது.

இந்த யுத்த காலத்தில் ஏராளமான யுத்த வாகனங்கள் வீதிகளில் ஓடிததிரிந்தன. இந்திய, அமெரிக்க, கனேடிய வீரர்கள் பாதுகாப்புக் கடமையை மேற்கொண்டிருந்தனர்.

கொழும்பைச் சுற்றியுள்ள ரப்பர் தோட்டங்களில் தான் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன.

அன்று யப்பான் ஒரு குண்டு போட்டதற்கே மூட்டை முடிச்சுக்களோடு ஓடிய கொழும்பு மக்களிலும் பார்க்க தினமும் குண்டுகளுக்கு மத்தியில் வாழும் வடக்கு-கிழக்கு மக்களின் துணிச்சல்களைப் பாராட்டாமல் இருக்கவே முடியாது


உ

வட தமிழீழத்தில்
கந்தன் காட்சி அளித்த
புங்குடுதீவு கதிர்காமம்
உயர் திருவிழா (நினைவு)

அபிடேக
ஆராதனை பூசை

காலம் :
05-09-1995 செவ்வாய்
காலை 8–30 மணி

கோவில் :
அருள்மிகு செந்தில் கதிர் வேலாயுத
சுவாமிகள் திருக்கோவில்
காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்

✶ பக்தர்களைப் பங்கு கொண்டு அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

புங்குடுதீவுக் கதிர்காமம்
அறங்காவலர் சபை

[சி-1648]

# தமிழக கரையோர கிராமங்களில் புலிகள் தடையின்றி நடமாட்டம்

## அமைச்சர் சிதம்பரம் கூறுகிறார்

[சென்னை]

தமிழகத்தின் கடற்கரை ஓரமாக உள்ள கிராமங்களில் விடுதலைப் புலிகள் தடையில்லாமல் வந்து போக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: புலிகளின் வருகையை தடுப்பதற்கு தமிழக அரசு தவறிவிட்டது. ஆயுதங்கள், டீசல், பெற்றோல் போன்ற பொருட்கள் தமிழ்நாட்டின் வழியாக இலங்கைக்கு தாராளமாக கடத்திச் செல்லப்படுகின்றன.

சிறைச்சாலைகளிலும் சிறப்பு முகாம்களிலும் வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தீவிரவாதிகளை கட்டுப்படுத்தி வைப்பதிலும் மாநில அரசு தவறிவிட்டது.

பூந்தமல்லி சிறைச்சாலையின் பாதுகாப்புப் பற்றி பரிசீலனை செய்வதற்கு குழுவொன்று டில்லியிலிருந்து வரவுள்ளது என்றும் கூறினர். -ம-சி

யாழ் பல்கலைக்கழக

# பட்டமளிப்பு விழா 16-ம் திகதி நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக 1995-ம் ஆண்டிற்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 16 ந் திகதி சனிக்கிழமை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.

இப் பட்டமளிப்பு விழா மூன்று அமர்வுகளில் நடைபெறும் முதல் அமர்வு காலை 9 மணிக்கு நடைபெறும்.

பட்ட மற்றும் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுவதுடன் வைத்திய கலாநிதி பேராசிரியர் செ. சிவஞான சுந்தரத்திற்கு (நந்தி) விஞ்ஞான கலாநிதிப் பட்டம் வழங்கப்படும்.

இரண்டாவது அமர்வு காலை 11 மணிக்கு இடம்பெறும்.

மூன்றாவது அமர்வு பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். இவ் அமர்வில் பட்டம் வழங்குவதுடன் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் நிலை பின் விஞ்ஞான கலாநிதிப் பட்டம் வழங்கப்படும். -162-சி

# இருவார கால இலவச உலர்உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களுக்கான இரண்டு வாரகால இலவச உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் கே. மகாலிங்கம் நேற்று தெரிவித்தார்.

கடந்த யூன்மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரையான இரண்டு வார காலத்துக்குரிய இடம் பெயர்ந்தோர் முத்திரையின் 28 பி என்ற புள்ளிக்கே உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். 170-162-சி

## முதலுதவிப் பயிற்சி

(வேலணை)

வேலணை பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான முதலுதவிப்பயிற்சி இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் காலை 8 30 மணிக்கு சென் ஜோன்ஸ் அக்கடமி ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டத்தில் வேலணை பிரதேச செயலர் திரு இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறும். 75-சி

# சைக்கிளில் சென்றவர் மிதிவெடியில் சிக்கினர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பில் இராணுவம் வைத்த மிதிவெடியில் சிக்கி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் வடலியடைப்பைச் சேர்ந்த வீரசிங்கம் ரவி என்பவர் (வயது-28) தமது சைக்கிளில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஒழுங்கை வழியாக சென்று கொண்டிருந்தபோது மிதிவெடி ஒன்றில் அகப்பட்டு சைக்கிள் பலத்த சேதமடைந்ததுடன் இவருக்கும் கால்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டன.

மிதிவெடி ஏற்படுத்திய சத்தத்தை கேட்டு அவ்விடத்துக்கு வந்த சிலர் இவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்து யாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்ததாக தெரிவிக்கப்பட்டது. -72-சி

## புலிகளுடனான

(1ம் பக்க தொடர்ச்சி)

போது புலிகளுக்கு எதிரான போரில் அமெரிக்கா இலங்கைக்கு உதவ வேண்டும் எனவற்புறுத்தப்பட்டதாம்.

அத்துடன் இனப் பிரச்சினைத் தீர்வுக்கென ஜனாதிபதி சந்திரிகாவால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் பற்றியும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் ரோபின்ராபெல் கொழும்பில் பல தரப்புடனும் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# பாடசாலை விடுமுறைதினங்களை குறைக்க அரச முடிவு

[கொழும்பு]

பாடசாலை விடுமுறை நாட்களை குறைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் பாடசாலைகளில் மாணவர்கள் கல்வி கற்கும் நேரமும் அதிகரிக்கப்படவுள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன இது பற்றி அறிவித்திருக்கின்றார்.

ஆசிரியர்களுக்கு அதிக விடுமுறை கிடைப்பதே இந்த முடிவைத் தான் எடுப்பதற்குக் காரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார்

பாடசாலைகளின் கல்வி நேரத்தை தினமும் அரை மணித்தியாலத்தால் அதிகரிக்க முடிவெடுக்கப்பட்டிருப்பதாக ஏற்கனவே செய்தி வெளியாகியிருந்தமை தெரிந்ததே. கி-சி

# புலிகளை தோற்கடிக்க தேரோக்கள் கோரிக்கை

[கொழும்பு]

சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடைமுறைப்படுத்துவதோடு விடுதலைப்புலிகளை தோற்கடிக்குமாறு மகாநாயக்க தேரோக்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பதாக 'வெரித் தாஸ் தெரிவித்தது.

இதுபற்றி கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மகாநாயக்க தேரோக்கள் அறிவித்திருப்பதாகவும் வெரித் தாஸ் மேலும் தெரிவித்தது. -ம-ரி

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் இன்றைய உதைபந்தாட்டப் போட்டிகளின் விபரம்: சென் - மேரிஸ் எதிர் உதயசூரியன், அறிவொளி எதிர் கலை, சென் நீக்கிலஸ் எதிர் பாடும்மீன் இப் போட்டிகள் யாவும் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். வி-சி

# முத்திரைகள் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

லங்கா கல்யாணியில் குறைந்தளவு தபால் பொதிகள் வந்த போதும் இதில் முத்திரைகள் வரவில்லை.

யாழ் மாவட்டத்திற்கு முத்திரைகளை அனுப்புமாறு கொழும்புக்கு அவசர கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் முத்திரைகள் அனுப்பப்படவில்லை 170-சி

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது.

பி. பி ஸி. மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் இக்கப்பலை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்லும் நோக்கத்தில் கப்பலின் என்ஜினை இயக்கினர் ஆனால் விமானப் படையின் செயற்பாடுகள் இந்த முயற்சியை கைவிடச் செய்துவிட்டன.

இராணுவ நடவடிக்கைகளுக்கு இக்கப்பல் பயன்படுத்தப்படமாட்டாதென புலிகள் உத்தரவாதமளிக்க வேண்டும் எனவும் இல்லையேல் படையினர் இக்கப்பலைத் தாக்குவர் எனவும் இராணுவம் அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டது. —சி

# செஞ்சிலுவை சங்கத்தில் கோடிக்கணக்கில் பணம் மோசடி

(கொழும்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் கோடிக்கணக்கான ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளமை தற்பொழுது தெரிய வந்துள்ளது.

சர்வதேச அமைப்புக்களினால் இலங்கையின் சமூக மேம்பாட்டுத்திட்டங்களுக்கும், இடம்பெயர்ந்தோருக்கும் உதவுவதற்கென வழங்கப்பட்ட பணமே மோசடி செய்யப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக இரகசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் செஞ்சிலுவைச் சங்க தலைமை நிர்வாகிகள் இது தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். கி

பார்த்தவர்களின் பாராட்டினைப் பெற்று

4 வது ஜனத்திரள் வாரத்தை நோக்கி வெற்றி நடை போடுகிறது

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

தினசரி: 2.30, 4.30, 6.30

சனி, ஞாயிறு 10.30, 2.30, 4.30, 6.30

நிதர்சனமும்

மட்டு – அம்பாறை சிறப்புப் படையணியும்

இணைந்து வழங்கும்

சி. சேரனின்

உறங்காத கண்மணிகள்

[வேவுப் புலி வீரரின் உண்மைக் கதை - கலர்]

அரங்கு நிறைந்த காட்சியாக

காண்பிக்கப்படுகிறது

(எ5256)

## பயணிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்: இந்தப் பயணிகளை முதலில் தரைவழியாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச்சென்று அங்கு வைத்து ஐ சி. ஆர். சியிடம் ஒப்படைக்க புலிகள் இணக்கமாயுள்ளனர்.

எனினும் எட்டு மாலுமிகளையும் ஒரு சில பயணிகளையும் விடுதலைசெய்ய புலிகள் நிபந்தனை விதித்துள்ளார்கள். தற்போது இந்த பயணிகள் நலமாயுள்ளனர். மாலுமிகளில் ஐவர் சிங்களவர். பயணிகளை விட ஈ பி.டி பியினரும் இக்கப்பலில் இருந்தார்கள் எனவும் குறிப்பிட்டது. சி

தமிழோசை

# நிகழ்ச்சித் தெரிவு பற்றி நேயர்களிடம் விபரம் சேகரிப்பு

(லண்டன்)

லண்டன் பி.பி.சியின் தமிழோசை நிகழ்ச்சிகள் உங்கள் பகுதிகளில் எப்படிக் கேட்கின்றன என்ற விபரத்தை தங்களுக்கு அறியத்தருமாறு பி.பி.சி கேட்டுள்ளது.

தமிழோசை நிகழ்ச்சிகள் தற்போது சிற்றலை 31 41,49 அலைவரிசைகளில் ஒலிபரப்பாகின்றன. ஆனால் தற்போது இந்த அலைவரிசைகளில் நிகழ்ச்சிகளை தெளிவாகக் கேட்கமுடிவதில்லை என பல நேயர்களும் தெரிவித்துள்ளதை அடுத்து பி பி சி நேயர்களின் கருத்தைக் கோரியுள்ளது.

நிகழ்ச்சி தெளிவுபற்றி எழுதும் போது நிகழ்சியை செவிமடுத்த இடம், திகதி, நேரம் ஒலிபரப்பான அலைவரிசை போன்ற விபரங்களையும் நேயர்கள் குறிப்பிடல் வேண்டும். கி-கி

## புலிகளின்

(1ம் பக்க தொடர்ச்சி)

புலிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும் அரசுக்கும் புலிகளுக்கு மிடையிலான மத்தியஸ்தராக தான் செயற்படுவதால் மேலதிக தகவல்களை வெளியிட முடியாதென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதித் தலைவர் திரு கோல் புறூக் கூறியுள்ளார். கி-சி

விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளான ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ். வீதி ஆகிய வீதிகளில் கடைகளும், யாழ். மாநகர எல்லைக்குள் சகல வசதிகளும் கூடிய வீடுகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

கனகசபை தர்மகுலசிங்கம்

"விற்பனை முகவர்", சிவன் கோவிலடி, யாழ்ப்பாணம்.

பழமுதிர் சோலை, காரைநகர். [ஏ-5252]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில், மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Postoffice Sri Lanka under Licenc Number B / 1633613.